


968

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

நெல்லை நகர் நூலகம்

✲ பொன் விழா மலர் ✲

TVS

Serve you

By

Serving

The Transport Operator

Tò give you

Efficient

Low-Cost


Transport




சி. என். அண்ணதுரை,

முதலமைச்சர்.

தமிழக அரசு அமைச்சர்கள்



மாண்புமிகு
இரா. நெடுஞ்செழியன்,
கல்வி, தொழில் அமைச்சர்.



மாண்புமிகு
மு. கருணாநிதி,
பொதுப் பணித்துறை அமைச்சர்



மாண்புமிகு
கே. ஏ. மதியழகன்,
வருவாய்த்துறை, உணவு அமைச்சர்.



மாண்புமிகு
செ. மாதவன்,
சட்டம், கூட்டுறவுத்துறை அமைச்சர்.

தமிழக அரசு அமைச்சர்கள்



மாண்புமிகு
மா. முத்துசாமி,
உள்ளாட்சித்துறை அமைச்சர்.




மாண்புமிகு
எஸ். ஜே. சாதிக்பாஷா,
மருத்துவத்துறை அமைச்சர்.



மாண்புமிகு
ஏ. கோவிந்தசாமி,
விவசாய அமைச்சர்.



மாண்புமிகு
டாக்டர் சத்தியவாணிமுத்து,
அரிசனநல, செய்தித்துறை அமைச்சர்.



நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அமரர்
ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை M. A., M. L. A., அவர்களுக்கு
பொன்விழா மலர் சமர்ப்பணம்.

மக்கள் தலைவர் அமரர்

உயர்திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை

நெல்லை மாவட்டத்தில் செல்வமும் செல்வாக்கும் மிக்கதோர் குடும்பத்தில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 1910-ம் ஆண்டு பிறந்தார்கள். தந்தையின் பெயர் உயர்திரு. அகிலாண்டம் பிள்ளை. நெல்லை இந்துக் கல்லூரியில் படித்து B. A. பட்டமும் சென்னை பிரசிடென்சி கல்லூரியில் படித்து M. A. பட்டமும் பெற்றார்கள். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர் உயர்திரு. ஈஸ்வரன் பிள்ளை அவர்களின் குமாரியை மணந்தார்கள். அவர்களுக்கு இரு மகன்களும், இரு மகள்களும் உள்ளனர்.

நெல்லை மாவட்டத்தில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் கூட்டுறவு இல்லாத பொது நிறுவனங்களே இல்லையெனக் கூறுமளவு பொதுப் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். 1957 முதல் 1966 வரை நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நூலகத் துறைக்கு அரும்பெரும் பணியாற்றியுள்ளார்கள். இவர்களுடைய பணி காலத்தில் சுமார் 70 நூலகங்கள் திறக்கப்பட்டன. நெல்லை இந்துக் கல்லூரி நிர்வாகக் குழுச் செயலாளராகவும், திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான தர்மகர்த்தாக்கள் குழுத் தலைவராகவும், குற்றாலம் ரோட்டரி சங்கத் தலைவராகவும், மதுரை பாங்க் இயக்குநராகவும், இலஞ்சி ராமசாமி பிள்ளை உயர்நிலைப்பள்ளி, ஈசுவரன் பிள்ளை துவக்கப்பள்ளி ஆகியவற்றின் நிர்வாகியாகவும், தென்காசி கூட்டுறவு நில அடமான பாங்க் தலைவாாகவும், தென்காசி திருவள்ளுவர் கழகத் தலைவராகவும், தமிழக மாநில நூலகக் குழு உறுப்பினராகவும், தமிழக அருள் நெறித் திருக்கூட்டத் தலைவராகவும், நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாக் குழுத் தலைவராகவும், தமிழக மேல்சபைத் தலைவராகவும், தென்காசித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற குழுத் தலைவராகவும் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் நீண்டகாலம் அரும் பெரும் பணியாற்றியுள்ளார்கள்.


உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் உதவியாலும், ஒத்துழைப்பாலும், மறுமலர்ச்சியடைந்த பொது நிறுவனங்களும், நிறைவேறிய பொதுப் பணிகளும், திருப்பணிகளும், பயனடைந்த மக்களும், பல்லாயிரம். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் பண்பின் சிகரமாய், அன்பின் இருப்பிடமாய், அறிவின்

கருவூலமாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் அன்பிலும், பண்பிலும் தங்களின் மனதை பறி கொடுக்காதவர்கள் யாருமில்லை. ஏழை மக்களிடம் அன்புடனும், பண்புடனும் பழகி, அவர்களின் துன்பங்களையும் துயர்களையும், தன்னால் முடிந்த அளவு போக்கினார்கள். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் இல்லம் சென்று உணவு அருந்தாமல் திரும்பியவர்கள் யாருமில்லை. பொது நிறுவனங்களுக்கும், பொதுப் பணிகளுக்கும், திருப்பணிகளுக்கும், தனிப்பட்டவர்களுக்கும் அவர்கள் வாரி வழங்கிய தொகை பல லட்சம். தமிழ் நாட்டில் வள்ளல் தன்மை காரணமாக இலஞ்சி வள்ளல் என்று சிறப்புப் பெயரைப் பெற்றார்கள். தமிழ் நாட்டில் ஜாதி மத பாகுபாடு இன்றியும், கட்சி பாகுபாடு இன்றியும், மதிப்புடனும், மரியாதையுடனும் எல்லோராலும் போற்றப்பட்ட மக்கள் தலைவர் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்தான். உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் பணியால் பயனடைய இருந்த பொது நிறுவனங்களும், பொதுப் பணிகளும், திருப் பணிகளும் பல பல. ஆனால் இறைவன் அந்த வாய்ப்பை நமக்கு, இந்த நாட்டிற்கு அளிக்கவில்லை. உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் 6—12—67 காலை யாரும் எதிர்பாராத வண்ணம் மறைந்தார்கள். அவர்கள் மறைவால் தமிழகம் அதிர்ச்சிக்கும் தீராத் துயரத்திற்கும் உள்ளாகியது. தமிழக வரலாற்றில், மக்கள் உள்ளங்களில் உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் பணியும், அன்பும், பண்பும் நிறைந்த உருவமும் புன்முறுவல் பூத்த முகமும் என்றும் மறையாது.

நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாக்குழுத் தலைவராகப் பணியாற்றிய எங்கள் தலைவர் மறைந்த மாவீரர், மக்கள் தலைவர் அமரர் உயர்திரு. ஐ ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு இப் பொன்விழா மலரை எங்களின் அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கிறோம்.


நெல்லை
12—3—68.

நெல்லை நகர் பொது நூலக
பொன்விழாக் குழுவினர்.




உயர்திரு. M. D. பால் M. A., M. Sc., Ed. D. (Col.)

மாநிலக் கல்வி & பொது நூலக இயக்குநர்.



உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்
தலைவர்
(நெல்லை மாவட்ட நூலகத் தந்தை)



திரு. பொ. ஆல்பிரட், பி. ஏ., எல். டி.,
செயலாளர்,
நூலக ஆணைக்குழு & நடு நெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி,
திருநெல்வேலி.




உயர்திரு. S. கல்யாணசுந்தரம் பிள்ளை

செயலாளர் :-

பொன்விழாக் குழு, நெல்லை நகர் பொது நூலகம்

(உரிமையாளர்:- சென்ட்ரல் டாக்கீஸ் & S. K. பிக்சர்ஸ்)



நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு உறுப்பினர்கள்.

நெல்லை நகர் நூலகத்தில் புதிய தலைவர்
உயர்திரு. A. P. C. வீரபாகு அவர்களுக்கு
நடந்த வரவேற்பு விழாவில் முன்னாள் தலைவர்
உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்
தலைமையுரையாற்றுகிறார்கள்.






வரவேற்பிற்கு நன்றி தெரிவித்து தலைவர்
உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்
பேசுகிறார்கள்.



பெருமாள்புரம் பெண்கள் நூலகம் திறப்பு விழா




உயர்திரு. A. P. C. வீரபாகு B. A., அவர்கள்
நூலக ஆணைக்குழுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட சமயம்
நடைபெற்ற நூலக ஆணைக்குழுக் கூட்டம்.



பாளையங்கோட்டை குழந்தைகள் நூலகத்தை திறந்து வைத்து
முன்னாள் தலைவர்
உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்
உரையாற்றுகிறார்கள்.



நெல்லை நகர் பொது நூலகத்தில் நூலக ஆணைக் குழுவின்
முன்னாள் தலைவர்
உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு
நடந்த பாராட்டு விழா.




புத்தக அலமாரியிலிருந்து வாசகர்கள் புத்தகம் எடுக்கும் காட்சி



உயர்திரு. **M.** முத்துவேலு
B. A., B T.,
நூலக மேற்பார்வையாளர்.



உயர்திரு. **M.** பரமேஸ்வரன் பிள்ளை
B. A., L. T.,
முன்னாள் செயலாளர் & நடுநெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி. (11—4—66 முதல் 17—4—67 வரை)




உயர்திரு. **S.** நல்லகண்ணு B. A , B. T.,
முன்னாள் செயலாளர். (பொறுப்பு) (8 - 11 - 65 முதல் 11 -- 4 —66 வரை)



உயர்திரு. S. பேரின்பமுத்து B. A., M. Ed.,

செயலாளர்: நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

நடுநெல்லை மாவட்டக் கல்வி அதிகாரி.




★★

அமரர்

அ. க. நவநீதகிருஷ்ண பிள்ளை
அவர்கள்

(பொன்விழாக் குழு உறுப்பினர்)


★★




நெல்லை நகர் நூலக நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் நூலகப் பணியாளர்களுடன்
(வெள்ளிக் கேடயம் பரிசு பெற்ற விழாவின் சமயம்)

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு


நெல்லை நகர் பொது நூலகம்




திரு.	திரு.	திரு.	திரு.
D. வெங்கடாசலம்,	**L.** சுப்பிரமணியம்,	**N.** வடிவழகியநம்பி,	**S.** அருணசலம்.
நூலகர்.	ஊழியர்.	உதவியாளர்.	உதவியாளர்.




நெல்லை நகர் பொது நூலகப் புதுக் கட்டிடமும் பழைய கட்டிடமும்.




நெல்லை நகர் பொது நூலகப் புதுக்கட்டிடத்தின் முன் பக்கத் தோற்றம்.




உறுப்பினர் ஒருவர் புத்தகப் பட்டியலை
பார்க்கும் காட்சி





நெல்லை நகர் பொது நூலகத்தில் நூல்கள் படித்துக்
கொண்டிருக்கும் மக்கள் பகுதியில் ஒரு காட்சி




நெல்லை நகர் பொது நூலகப் புது கட்டிடத்தின்
உட்புறத்தோற்றம்-வாசகர்களுடன்







சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்பாள் கோபுரத் தோற்றமும் பொற்றாமரைக் குளமும்



நெல்லை மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம்

பாளையங்கோட்டை.

★

மேலப்பாளையம் நாகூர் ஆண்டவர் என்ற

காதரொலியா தர்கா


★



தர்கா இனும்தார்,

P. M. பீர்சாகிப்,

158, லெக்ஷிமிபுரம் தெரு, :: மேலப்பாளையம்.



பாளையங்கோட்டை அத்தியக்ஷய ஆலயம்

SECRETARY TO THE PRESIDENT
OF INDIA,
Rashtrapati Bhavan,
NEW DELHI-4.

No. F. 3-M/67.

November 2, 1967.

Dear Sir,

The President is glad to learn from your letter of October 25, 1967, that the Golden Jubilee of the Local Library Authority, Tirunelveli Town Public Library, will be held in December 1967. He sends his best wishes on the occasion.

Yours faithfully,

Nagendra Singh.

VICE-PRESIDENT
INDIA.

New Delhi
November 2, 1967.

Dear Sir,

Thank you for your letter of the 25th October.

I send my best wishes for the success of the Golden Jubilee Celebrations of the Local Library Authority.

Yours faithfully,

V V. Giri.

सत्यमेव जयते

PRIME MINISTER'S SECRETARIAT
NEW DELHI-11.

N. 9. (3)/66 PMP.

December 28, 1966.

Dear Sir,

The Prime Minister is glad to know that the Public Library of Tirunelveli is completing fifty years of service next month. She sends her best wishes for the success of the Golden Jubilee celebrations you have planned.

Yours faithfully,

H. Y. SHARADA PRASAD
Deputy Information Adviser to the Prime Minister.

சி. என். அண்ணதுரை.
முதலமைச்சர்.

கோட்டை,
சென்னை-9.
9—8—1967.

நெல்லை நகர் பொது நூலகத்தின் பொன்விழா நிகழ்ச்சிகள் நல்ல முறையில் நடைபெறவும் அதனையொட்டி வெளிவரும் மலர் சிறந்த முறையில் அமையவும் என் நல் வாழ்த்துக்கள்.

சி. என். அண்ணதுரை.

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-தொழில் அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை-9.
ஆகஸ்டு 26, 1967.

மக்களுக்கு அறிவு ஊற்றாகவும், விளக்காகவும் நூலகங்கள் பயன்பட்டு, வாழ்க்கையை உயர்த்த உதவுகின்றன. 'கற்றனைத் தூறும் அறிவு' என்பது வள்ளுவர் வாய்மொழி. மக்களிடையே நல்ல நூல்களைப் பரப்பவும், அவற்றைப் படிக்கின்ற ஆர்வத்தை எழுப்பவும் மேற்கொள்ளப் படுகின்ற முயற்சியெதுவும் பாராட்டி வரவேற்கத் தக்கதாகும்.

நெல்லை நகர் பொது நூலகப் பொன் விழா அண்மையில் நடைபெறவிருப்பதையும், பொன் விழாக் கட்டிடம் திறக்கப்பட இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். விழா இனிது நடந்தேற எனது நல் வாழ்த்துக்கள்.

இரா. நெடுஞ்செழியன்.

மு. கருணாநிதி,
பொதுப்பணி அமைச்சர்.

தமிழக அரசு
தலைமைச் செயலகம்
சென்னை-9.
22—9—1967.

அறிவு வளர்ச்சிக்குச் சிறந்த சாதனம் நூலகங்கள். நெல்லை நகர் நூலகம் நல்ல முறையில் வளர்ந்து தற்போது பொன்விழாக் கொண்டாடுவது குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

விழா சிறப்பாக நடைபெறவும், மலர் வெளியீட்டு முயற்சிக்கும் என் மனமார்ந்த நல் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,
மு. கருணாநிதி.

S. MADHAVAN,
MINISTER FOR
LAW AND CO-OPERATION.

FORT ST. GEORGE,
MADRAS-9.
1—8—67

ஊரெங்கும் பள்ளி இருப்பது போலவே நூலகமும் இன்றியமையாத தேவை. காலத் தேவைக்கு ஏற்ற அரிய நூல்களை நூலகங்களில் வைத்தால்தான், மக்கள் தாங்கள் பெற்ற கல்வி யின் முழுப் பயனையும் அடைய முடியும். நெல்லை நகர் பொது நூலகப் பொன்விழாவையொட்டி, பொன் விழாக் கட்டடம் கட்டி, திறப்பு விழா நடத்தப்படுவது அறிந்து மிக்க மகிழ்ச்சி யடைகிறேன்.

மக்களின் கருத்தை ஈர்க்கும் முறையில் பொன்விழா இனிது நிறைவேறவும், நூலகம் மேலும் மேலும் வளரவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செ. மாதவன்

டாக்டர் சத்தியவாணி முத்து
அரிசன நல, செய்தித்துறை
அமைச்சர்.

செயின்ட் ஜார்ஜ் கோட்டை
சென்னை-9.
16—8 –1967.

அறிவு வளர்ச்சிக்கும் கல்வி மேம்பாட்டுக்கும் சிறந்த துணையாக விளங்குபவை நூலகங்கள். நெல்லை நகர் பொது நூலகம் பொன்விழா கொண்டாடும் அளவில் வளர்ச்சி பெற்று, பொன்விழாக் கட்டிடமும் கட்டி முடித்திருப்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். இச் சிறந்த பணி மேலும் வளரவும், இனிது நிறைவேறவும் என் மனமார்ந்த வாழ்த்துக்கள்.

சத்தியவாணி முத்து

டாக்டர் ம. தே. பால்,
மாநில நூலக இயக்குநர்.

சென்னை-6.
நாள். 7—8—67.

திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக்குழுவினர் ஆற்றிவரும் நூலகப் பணிக்கு எனது பாராட்டுதல்கள். தங்கள் மாவட்டத்தில் இன்று ஒரு தலைமை நூலகம், 101 கிளை நூலகங்கள், 34 நூல்வழங்கு நிலையங்கள் மூலம் நூலகப் பணியாற்றி வருகிறீர்கள்.

நம் நாட்டில் குடியாட்சி சிறப்புற்று ஓங்க கல்வி வளர்ச்சி இன்றியமையாததாகும். மக்கள் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டால் மட்டும் போதாது. கற்ற கல்வி மங்கா திருக்க மேலும், மேலும் தொடர்ந்து படிக்க வேண்டும். தொடர்ந்து படிக்க ஏற்ற நூல்கள் தேவை. இத்தேவையைப் பூர்த்தி செய்வதே நூலகங்களின் பணியாகும். ஊரெங்கிலும் நூலகங்களைத் தோற்றுவித்து மக்களின் அறிவை வளரச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தமிழ்நாட்டில் பொது நூலக இயக்கம் தோன்றியது. நூலகப்பணியில் மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்குகிறது தமிழகம்.

தங்கள் மாவட்டத்தில் நூலகப் பணி இன்னும் சிறந்த முறையில் வளர்ச்சியடையவும் மக்களுக்கு நூலகத் தொண்டின் பயன் பரவவும், மாவட்ட நூலக ஆணைக்குழு பணியாற்றும் என்று நம்புகிறேன். எனது இதயம் நிறைந்த நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,

ம. தே. பால்.

MADURAI UNIVERSITY

Prof. T. P. Meenakshisundaran,
Vice-Chancellor.

UNIVERSITY BUILDINGS,
MADURAI-2.

No. 534/v

16th Dec. 1966.

MESSAGE.

Prof. T. P. Meenakshisundaran, Vice-Chancellor, Madurai University is indeed happy to learn that the Tirunelveli Local Library Authority Public Library is going to celebrate its Golden Jubilee in the month of January, 1967. He wishes the celebrations every success.

Mr. Justice
K. VEERASWAMI.

December 22,
1966.

I am glad to note that the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library, Tirunelveli Town will be celebrated in the last week of January 1967. It is a good augury that on the occasion a new building will be opened. Let me congratulate the concerned authorities on the successful work they have done and wish the Public Library a brighter future.

Yours sincerely,

K. Veeraswami.

T. S. Avinashilingam,
Sri Ramakrishna Mission Vidyala P. O.
Coimbatore Dt.

December 26, 1966.

I am happy to learn that the Golden Jubilee of the Tirunelveli Town L. L. A. Public Library is being celebrated shortly. Libraries have a great part to play in disseminating knowledge and information to the people around.

I have pleasure in sending my best wishes and prayers for the success of the function and the Tirunelveli Town Library a long era of useful service.

Yours sincerely,

T. S. Avinashilingam.

M. M. Rajendran, I.A.S.,
Collector of Tirunelveli.

TIRUNELVELI,
Dated 2nd January 1967

I am very happy to know that you will be celebrating the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library. Libraries have a great role to play in educating the public and keeping them abreast of current trends of thinking and propagating knowledge. I do hope that your library will continue to lend useful service to the public and grow in stature day by day.

I wish the function all success.

Yours sincerely,

M. M. Rajendran.

OFFICE OF THE
BRITISH DEPUTY HIGH COMMISSIONER
IN SOUTHERN INDIA
INFORMATION SECTION

150-a, Mount Road,
Madras-2

23 January, 1967

The British High Commissioner has asked me to send you his best wishes on the occasion of the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library. He wishes you many more years of useful service to the public.

Yours faithfully,

C. K. Woodfield

Second Secretary
(Information)

K. Venkatasubramanian, M. A., B. T.,
Divisional Inspector of Schools,
Coimbatore division.

COIMBATORE,
24-12-1966.

I am extremely happy to know that the Local Library Authority, Tirunelveli is celebrating its Golden Jubilee in the last week of January 1967.

Tirunelveli district has stood first in many things and it has always been leading especially in the field of Education. In the sphere of Library movement also the L. L. A. Tirunelveli has done remarkable things of which all the public of Tirunelveli could feel proud. The L. L. A. had a series of illustrious Chairmen who gave strength to this movement and it is no wonder that to-day the L. L A. Tirunelveli occupies the foremost place in the state of Madras in the Library movement.

I wish your function all success.

Yours sincerely,
K. Venkatasubramanian.

SRI K. GOPALAN, M. A., M. Sc., B. T.,
Divisional Inspector of Schools,
Madurai Division.

MADURAI-2,

25—12—66.

I am glad to know that the Local Library Authority, Tirunelveli is celebrating its Golden Jubilee in the last week of January '67. It is needless for me to say that if the Local Library Authority has been doing good service during the past 50 years in the library movement, the credit goes to the sincere efforts of the past and present Chairmen and other members of the Local Library Authority who had evinced great interest in the improvement of the Library Movement in Tirunelveli District. The celebration of the Golden Jubilee is a fitting recognition of the valuable services rendered by the Local Library Authority, Tirunelveli. I wish the function all success.

With regards,

Yours sincerely,

K. Gopalan.

எம். பரமேஸ்வரன் பிள்ளை,
பி. ஏ., எல். டி.,
தனி மாவட்டக் கல்வி அலுவலர்,

திருச்சிராப்பள்ளி,
தேதி: 27—11—67.

நெல்லை நகர், பொது நூலகப் பொன்விழாவும், பொன்விழா மலர் வெளியீட்டு விழாவும் விரைவில் நடைபெற இருக்கின்றன என்ற செய்தி கேட்டு மகிழ்ச்சி அடைகிறேன். இரண்டு விழாக்களும் இனிது நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். கற்றவர்கள் நிறைந்த நெல்லை மாநகரிலும், மாவட்டத்திலுமுள்ள நூலகங்கள் பல தாங்கள் காட்டும் வழியில் சென்று அவரவர் தம் நூலகங்களின் பொன்விழாக்கள் நடத்துவதோடு, சிறப்புமிக்க மலர்கள் பல வெளியிட்டு மகிழ்வார்கள் என்று நம்புகிறேன்.

வாழ்க நும் சீரிய பணி.

அன்பன்,

ம. பரமேசுவரன்

ஸ்ரீ ஸ்ரீ சிரிங்கேரி ஜகத்குரு மஹா சமஸ்தானம்,
சிரிங்கேரி மடம், சாரதா பீடம்,
சிரிங்கேரி P. O., காடூர்.
(மைசூர் மாநிலம்)

Y. M. கிருஷ்ணமூர்த்தி, பி. எஸ்சி.
ஜகத்குரு அவர்களின் தனிச் செயலாளர்.

தங்கல் — புது டில்லி-16.
29—12—1966.

குறிப்பு எண்: 6120, 66/67.

விஞ்ஞாபனம்

தங்கள் காரியதரிசி எழுதிய கடிதமும் நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு நெல்லை நகரப் பொது நூலகத்தின் பொன்விழா புதிய கட்டிடத் திறப்புவிழா பத்திரிகையும் கிடைத்தது. மகாசந்நிதானத்தில் சமர்ப்பிவிக்கப்பட்டது.

மகாசந்நிதானம் ஷை நூலகம் பல ஏழைப் பொது மக்களுக்கு மிகவும் உபகாரமாக 50 வருடங்களாய் உபயோகப்பட்டு வருவதை அபிவிருத்தி செய்ய புதுக்கட்டிடமும் கட்டி அதன் திறப்பு விழா கொண்டாட உத்தேசித்திருப்பது மிகவும் கொண்டாடத்தக்க காரியம். ஷை விழா சிறப்பாய் நடக்கவேண்டுமெனவும் ஷை நூலகம் இன்னும் அநேக மக்களுக்கு உபகாரமாகயிருக்க வேண்டுமெனவும் ஆசீர்வதித்து அருளிய மந்தராக்ஷதை ஸ்ரீ சாரதா சந்திரமௌளீஸ்வரர் பிரசாதம் இத்துடன் அனுப்பியிருக்கிறது.

திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு,
தலைவர், திருநெல்வேலி நகர் நூலக
பொன்விழாக் குழு,
திருநெல்வேலி நகர்.

இப்படிக்கு,
Y. M. கிருஷ்ணமூர்த்தி.

UNIVERSITY OF MADRAS

UNIVERSITY BUILDINGS,
CHEPAUK,
MADRAS - 5.

A. Thirumalaimuthuswamy
M. A., M. Litt., B. T., D. Lib.
Department of Library Science.

Dated 22—12—'66

I thank you for your letter of the 15th instant. I am glad to learn that the new building of the Branch Library, Tirunelveli Town, the oldest as well as the foremost Branch Library of the Local Library Authority, Tirunelveli, has been completed and is to be opened shortly in connection with the Golden Jubilee Celeberation of the Branch Library, Tirunelveli Town.

I would like to congratulate the Chairman, the Secretary, and the Members of the Local Library Authority, Tirunelveli, and the elite of the town for having put up a grand building for housing the Branch Library, Tirunelveli Town. I am sure this library with its new building will cater to the needs of more and more readers.

Please accept my best wishes for the success of the function.

Yours sincerely,

A. Thirumalaimuthuswamy

வ. அழகப்பன்,
தலைவர்
நூலக ஆணைக் குழு,
மதுரை மாவட்டம்.

மதுரை.
28, ஜனவரி 1967.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு நெல்லை நகர் பொது நூலகத்தின் பொன் விழாவும் பொன் விழா மண்டபத் திறப்பு விழாவும் நடத்தவிருப்பது கண்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். நெல்லை நூலக ஆணைக்குழு திரு. சிதம்பரம் பிள்ளையவர்களின் தலைமையில் இதுகாறும் சிறப்பாக நூலகத் தொண்டாற்றியது. உயர்திரு. வீரபாகு அவர்கள் தற்போது தலைவர் பொறுப்பேற்று இருக்கிறார்கள். இவர்களது காலத்திலும் நெல்லைமாவட்டம் நூலகத் தொண்டை மேலும் சிறப்பாக ஆற்றும் என நம்புகிறேன். நெல்லை நகரிலுள்ள பொது நூலகம் தொன்மையானது. அது மேலும் பல்லாண்டு இயங்கி சிறந்த கல்விப் பணியாற்ற வேண்டுமென எனது உளங்கனிந்த வாழ்த்தையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வ. அழகப்பன்.

ஜே. அ. றைட், M. A, M. Ed.,
(முன்னாள் நடு நெல்லை மாவட்ட கல்வி அதிகாரி)
கல்லூரி பேராசிரியர்,
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி,
உரத்தநாடு P. O., தஞ்சை மாவட்டம்.

1st Jan. 1967.

அன்புடையீர்!

தங்களது மடல் கிடைக்கப்பெற்றேன். நெல்லை மாநகரின் நடுநாயகமாக விளங்கி, கலங்கரை விளக்காகி அறிவுச்சுடரை இடைவிடாது மக்களினிடையே வீசிவரும் தங்கள் நூலகத்தின் 50-வது ஆண்டு நிறைவு விழா 1967-ம் ஆண்டு ஜனவரித் திங்களில் கொண்டாட இருப்பதைக் குறித்து பெருமையும் பூரிப்பும் அடைகின்றேன். இக்கிளை நூலகம் கடந்த பல ஆண்டுகளாக சிறந்த முறையில் தொண்டாற்றி வந்ததை குறிக்கும் வகையில் புதிய கட்டிடத்தின் திறப்பு விழாவும், ஆண்டுவிழா மலர் வெளியிட இருப்பதையும் அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நூலகம் கடந்த காலத்தில் செய்த தொண்டைப்போன்று எதிர்காலத்திலும் சிறந்த முறையில் பணியாற்றும் என நம்புகிறேன். இந்த விழா சிறந்த முறையில் நடைபெற அதற்குரிய ஏற்பாட்டை செய்து வருகின்ற விழாக் குழுவின் தலைவர் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., அவர்கட்கும், காரியதரிசி திரு. சு. கல்யாணசுந்தரம் பிள்ளை அவர்கட்கும் ஏனைய அங்கத்தினர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

உரத்தநாடு
1—1—1967

இங்ஙனம்,
ஜே. அ. றைட்.

Sri A. R. KHAN, B. Sc., L. T.
District Educational Officer

Madras North,
MADRAS-7.

Dated 5—1—1967.

I am glad to learn that the Golden Jubilee of the Tirunelveli Local Library Authority Public Library, Tirunelveli Town is to be celebrated shortly. I am also glad to learn that a Golden Jubilee New Building will be opened during the Golden Jubilee function. This is a land mark in the progress of the library which I am sure will cater to a larger section of the people in years to come. Associated as I was with the Local Library Authority, Tirunelveli for nearly three years, I am aware of the good work that is being done under the leadership of Sri I. A. Chidambaram Pillai M. A., the Chairman of the Local Library Authority, Tirunelveli who deserves to be congratulated.

I wish the function success and the Local Library Authority, Tirunelveli and its branches many years of useful service.

Yours sincerely,

A. R. Khan.

சி. கணபதியா பிள்ளை,
தலைவர்.
பாளையங்கோட்டை நகர மன்றம்.

30—11—'67.

வாழ்த்துரை

நெல்லை நகர மன்றத்தால் 1917-ல் துவக்கப்பட்டு, 1955 முதல் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழுவால் ஏற்று நடத்தப்பட்டு வரும் நெல்லை நகர் பொது நூலகம் இவ்வாண்டு பொன் விழா கொண்டாடுவது அறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன். முன்பு நான் நீண்ட காலமாக நெல்லை நகர மன்ற ஆணையாளராகப் பணியாற்றிய சமயம் இந்நூலக வளர்ச்சிக்காக பல நல்ல காரியங்களைச் செய்ய எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அச்சமயம் இந் நூலகத்திற்குப் பல அரும்பெரும் சிறந்த நூல்களை வாங்கி வழங்கி யுள்ளேன். அந் நூல்கள் மற்றைய நூலகங்களில் காண்பது அரிது. ஆலயங்களுக்கு அடுத்த புனித நிலையில் உள்ளவை நூலகங்கள். நாட்டின் எதிர்காலம் நூலகங்களின் வளர்ச்சியிலும் மக்கள் நூலகப் பணியை பயன்படுத்துவதிலும் இருக்கிறது. நெல்லை நகர் பொது நூலகத்தை பயன்படுத்தி உயர்ந்தவர்கள், அறிஞர்களாகவும் தலைவர்களாகவும் ஆனவர்கள் பல்லாயிரம். கடந்த 50 ஆண்டுகளாக அரும் பெரும் பணிகளைச் சிறந்த முறையில் செய்து இன்று பொன் விழாக் கொண்டாடும் நெல்லை நகர் பொது நூலகம் வருங்காலத்திலும் மேலும் சிறப்பாகப் பணியாற்றி சிறந்த அறிஞர்களையும், தலைவர்களையும் உருவாக்கும் என நம்புகிறேன். நெல்லை நகர் மக்களுக்கும், விழாக் குழுவினர்க்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்ட மத்திய நூலகம்,

பாளையங்கோட்டை.

S. கோமதிநாயகம், M. A.,
மாவட்ட மத்திய நூலகர்.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் மாவட்ட மத்திய நூலகம் மே, 1952-ல் திறக்கப்பட்டது. இந்நூலகம் பாளையங்கோட்டை திருவனந்தபுரம் ரோட்டில் "அப்பாசாமி - மனோரமா" கட்டிடத்தில் இருக்கிறது.

இந்நூலகத்தில் 15,132 சிறந்த பல்பொருள் நூல்கள் உள்ளன. 1934 உறுப்பினர்கள் இருக்கின்றனர். ஆண்டிற்கு 99,319 பார்வையாளர்கள் இந் நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆண்டிற்கு (L + C) 36470 + 21691 நூல்கள் உறுப்பினர்களுக்கும் நூலகத்திற்குள் படிப்பவர்களுக்கும் வழங்கப் படுகிறது.

இந்நூலகத்தில் பெண்கள் குழந்தைகளுக்கென தனிப்பிரிவு இயங்குகிறது. இந்நூலகத்தைச் சுற்றி 8 நூல் வழங்கும் நிலையங்கள் பணியாற்றுகின்றன. இந் நூலகத்திலிருந்து பாளையங்கோட்டை, நெல்லை, மேலப்பாளையம் நகரமன்றப் பகுதியில் உள்ள உறுப்பினர்களின் வீடுகளுக்கு மூன்று சக்கர சைக்கிள் மூலம் நூல்கள் வழங்கப்படுகிறது. மாவட்ட மத்திய நூலகம் விரைவில் பாளையங்கோட்டை கரையாளர் நூலகக் கட்டிடத்திற்கு மாற்றப்படவிருக்கிறது. கரையாளர் நூலகக் கட்டிடத்துடன் இணைத்து, அருகில் உள்ள புறம் போக்கு நிலத்தில் ரூ. 3 லட்சம் செலவில் நவீன வசதியுள்ள மாவட்ட மத்திய நூலகம் & நூலக ஆணைக்குழு அலுவலகக் கட்டிடங்கள் கட்ட நூலக ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

பொதுமக்கள் அனைவரும் மாவட்ட மத்திய நூலகத்தைத் தினமும் பயன் படுத்துவதுடன் ஒவ்வொருவரும் நூலக உறுப்பினராக வேண்டுகிறேன்.

S. NALLAKANNU, B. A., B. T.
Personal Assistant to the
Dist. Educational Officer,
Tirunelvely Central

Palayamcottai

Dated 12–1–67.

I am glad to know that the Golden Jubilee Committee of the Tirunelvely Town Local Library Authority Library is bringing out a souvenir on the occasion of the "Golden Jubilee".

I hope the Souvenir will find a wide circulation and will focuss public attention on the great need for taking further steps for the expansion of the library movement in this District.

I wish the function all success.

S. Nallakannu.

அகிலன்

171, லாயிட்ஸ் ரோடு,
சென்னை-14.

வணக்கம்.

நூலகப்பணி பணிகளிலெல்லாம் மிகச் சிறந்த பணி. நாட்டுக்குப் புறச் செல்வம் எளிதில் தேடலாம். மனிதர்களாகிய பெரும் செல்வத்தை உருவாக்கும் பணி நூலகத்திற்கு இருக்கிறது. அந்த அரும்பணியைச் செய்து வரும் நெல்லை நகர நூலகம் பொன் விழாக் கொண்டாடி புதுமனை புக இருப்பது கண்டு மகிழ்ச்சியுறுகிறேன். மலர் சிறப்போடு மணம் மிக்கதாக மலர்க! நூலகத்தில் தமிழகத்தின் சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த நூல்கள் அனைத்தையும் சேர்த்து, அனைவருக்கும் வழங்கி வளர்க! பொன் விழா இனிது நடைபெறவும் நூலகம் மென்மேலும் சிறந்து வளரவும் என் வாழ்த்துக்கள்.

அன்புள்ள,

அகிலன்,

தலைவர், தமிழ் எழுத்தாளர் சங்கம்.

மு. அப்துல் மஜீத்,
தலைவர்: நகராட்சி மன்றம் &
உறுப்பினர்:
சென்னை மாநில மின் குழு.

வ. உ. சிதம்பரம் கட்டிடம்,
நகர்மன்ற அலுவலகம்,
திருநெல்வேலி.
நாள்: 7—6—1968.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் கிளை நூலகமான நெல்லை நகர் நூலகம் தனது ஐம்பதாண்டு சேவை நிறைவை ஒட்டி பொன்விழாக் கொண்டாடுவதை எண்ணி மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். வளர்ந்து வரும் ஜனநாயக நாட்டில் நூலகத்தின் சீரிய பங்கைப் பற்றி நான் கூற வேண்டியதில்லை. கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. ஆனால் 'நூலகமில்லா ஊரில் குடியிருத்தல் வேண்டாம்' — என்ற புதுமொழிக்கிணங்க நெல்லை நகராட்சியினரும் இந் நூலகத்தின் வளர்ச்சியில் பெரிதும் ஆர்வம் கொண்டுள்ளனர். உதாரணமாக இந்நகர் மன்றத்தினர் ரூ. 18,800/– செலவில் புதிய துணைக் கட்டிடம் ஒன்றைக் கட்டி பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி அவர்களால் 27—8—67-ல் திறக்கச்செய்து நூலகத்தினர் இன்னும் விரிவான அளவில் சேவை செய்ய வழி வகுத்திருக்கின்றனர்.

நெல்லை மாநகரின் மையப்பகுதியில் அமைந்திருக்கும் இந் நூலகம் செழித்து வளர்ந்தோங்க என் உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள்.

பொன்விழா வைபவம் இனிதே நிறைவு பெறுவதாகுக!

இங்ஙனம்,
அன்பன்,
மு. அப்துல் மஜீத்

A. L. சுப்பிரமணியம்,
B. Sc., B. L.,
சட்டமன்ற உறுப்பினர்.

பாளையங்கோட்டை.
26 – 5 – 68.

அன்புடையீர்!

தங்களது கடிதம் கிடைக்கப்பெற்றேன். நெல்லை நகர்ப் பொது நூலகம் பொன்விழா கொண்டாட இருப்பது குறித்து மகிழ்ச்சி. கடந்த ஐம்பது ஆண்டு காலமாக இந்த நூலகம் நெல்லைப்பகுதியில் அளவிடற்கரிய சேவையைச் செய்துள்ளது. இன்று நாட்டில் நூலகங்களே அறிவாலயங்களாக உள்ளன. இந்த நூலகத்தின் தொண்டு தொடரும் என்று நம்புகின்றேன். என் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

அ. லெ. சுப்பிரமணியம்.

நூல் நிலையங்கள்

கே. பீர்முகம்மது, பி. எஸ்ஸி.,
ஆணையர், திருநெல்வேலி நகராட்சி.

"நம்ம பையன் சதா வாசகசாலையிலேதான் இருப்பான். எப்பொழுதும் புத்தகமும் கையுந்தான்!" என்று தந்தை பெருமையாகப் பேசுகிருர். அவையத்து முந்தி இருக்க வேண்டும் – தன் மகன், என்று விரும்புபவர், அத்தந்தை.

நூலகத்திற்குச் சென்று பையனைப் பார்ப்போம்; வேகமாகப் பத்திரிகைகளைப் புரட்டுகிருன். "என்ன ஆச்சரியம்! நான் மல அறையில் ஒருவருக்கும் தெரியாமல் கட்டுப்படுத்த இயலாத உணர்ச்சியுடன் கரியால் வரைந்த சித்திரம் அல்லவா, இங்கு அழகுறத் திகழ்கிறது! நம் அபிமான நடிகை பூரண நிர்வாணத்தில், சற்று மாசுபட, நிற்க அதற்கடியில் மண்டியிட்டு அமர்ந்திருக்கும் நம் அன்பு நடிகன் நிமிர்ந்து பார்த்து ரசிக்கிருன்! இதைத் திரையிலே தத்ரூபமாகக் கண்டால் எவ்வளவு இன்பம் பயக்கும். இந்தக் கருத்தோவியத்தைக் கக்கூசுச் சுவற்றில் எழுதி இது தவறென்று யாரும் பார்க்காமல் அழித்து விட்டேனே! இது எத்தகைய புகழ்பெற்ற கருத்து" என்று எண்ணி எண்ணிப் பெருமகிழ்வெய்துகிருன். மாலைவரை காத்திருக்க வேண்டியதில்லை — இக்கோலத்தைத் திரையிற் காண; பகல் காட்சிக்கே போய் விடலாம்' என்ற எண்ண அலைகளுடன் புத்தகப் பகுதிக்கு வருகிருன். கன்னியின் முத்தத்தைச் சுவைத்து முடித்துவிட்டு கனிந்தவளின் சித்தத்தைப் புரட்டுகிருன். எடுத்த எடுப்பிலேயே "உள்ளங்கவர் கள்வன் சுவரேறிக் குதித்துப் படுத்திருக்கும் கனிந்தவளைப் பற்றும் காட்சி" படிக்கப் படிக்க தெவிட்டாத தேனுகிருள் கனிந்தவள்; படத்திற்கு நேரம் ஆகிவிட்டது. புறப்படுகிருன். பையன் பத்திரிகையில் கண்ட புகைப்படமே தன் சித்தம் மகிழ்ந்து எழுதிய சித்திரத்தை ஒத்திருந்தபோது திரையில் நடப்பவை எப்படி அவனைக் கொள்ளை கொண்டிருக்கும்!

மறுநாள் கனிந்தவளின் காதற் கள்வனை அசட்டுக் கணவன் வாள்கொண்டு தாக்கச் சென்ருனே என்ன ஆயிற்று என்ற ஆர்வமோ, அல்லது ஆற்றங்கரையில் நீராடும் பெண்களைப் பார்த்து நின்ற நெடுமாறன் என்ன ஆனுன் என்ற ஏக்கமோ தூண்ட, நூல் நிலையம் திறக்கும் நேரத்தை ஆவலுடன் எதிர்நோக்கி விரைகிருன். மைந்தனின் நூலக ஆர்வத்தைக் கண்டு மட்டில்லா மகிழ்ச்சி அடைகிருர் தந்தை.

இத்தகைய நூலகப் படிப்பால் விளையும் பயனை இன்றைய சமுதாயத்தில் பார்க்கிருேம். "மக்கள் மனக்கோட்டம் அகற்றும் நூல்" என்று புத்தகங்களுக்கு இலக்கணம் வகுத்தார்கள். ஆனுல் நாம் மேலே பார்த்தவை, மனத்தை அழுக்குப்

படுத்திப் படுகுழியில் வீழ்த்துகின்றன. விற்பனை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட பத்திரிகை வகைகளும் புத்தகங்களும் இவ்விலக்கணத்திற்கு மாறாக மக்கள் சமுதாயத்தில் கயமையையே வளர்க்கின்றன.

கயவர் என்றவர், மனிதர்கள் போல் உரு அமைந்த ஒரு பிராணி என்றார் வள்ளுவர். விலங்குகளுடன் ஒப்பிடக்கூட அவர் விரும்பவில்லை. "மக்களே போலவர் கயவர்" என்றார். அவ்வாறே இக்காகிதக்கட்டுகளும் கக்கூஸ் சித்திரங்களும் நூலெனக் கருதப்படக்கூடாதவை. இவை புலன் இச்சைகளைக் கட்டவிழ்த்துவிட்டு கீழ்த்தர நோக்கங்களைத் தூண்டுவதால் பெரும்பான்மையோர் விரும்புகிறார்கள். நல்ல விற்பனையாகின்ற இவை அதம நூல்கள் எனப்படலாம். இவற்றால் இச்சைக்கேற்ப அனுபவிக்க அவாவுற்று நன்று தீதறியாமல் வீழ்ந்து வெளிப்படையாக அவமானமும் உடல்நோயும் பெறுவதுடன் உள் ஆத்மாவும் ஈனமுறும்.

இரண்டாம் வகையான நூல்கள் அறிவை வளர்ப்பன. உலக வாழ்க்கைக்கு பயன்படும் வகையில் புறஅறிவைப் போதிப்பன. தொழில் முறைகள், வியாபாரம், இயந்திரங்கள் முதலியன பற்றிய ஞானத்தைத் தருபவை விஞ்ஞானம், பூ இயல், இரசாயனம் போன்ற அறிவு நூல்கள், காமசாஸ்திரங்களும் கூடத்தான். இவை புலன் இச்சைகளைத் தொல்லையின்றி அனுபவித்து வாழ வழி செய்யும் புறஅறிவு நூல்கள். இவை மனித வாழ்க்கைக்குத் தேவையானவை. முதற்கூறிய அதமநூல்களில் ஈடுபட்டோருக்கு இவற்றைப் படிக்கும் எண்ணம் வருதல் அரிது.

மூன்றாம் வகையான நூல்கள் ஆத்மசக்தியை வளர்க்கும் நூல்கள். இவை தியாகத்தையும் தன்னலமற்ற சேவையையும் வளர்ப்பன. புலனடக்கத்தைப் போதித்து ஆத்மசுத்தி பெற்று மெஞ்ஞானத்தை அடையச் செய்வன. தாமரை இலைமேல் நீர் போல பட்டும் படாமலும் உலக வாழ்வில் ஈடுபட்டு மோன நிலையை அடைந்து என்றென்றும் நித்தியானந்தத்தில் இருக்கச் செய்பவை. இவை உத்தம நூல்கள். நவில்தொறும் நவில்தொறும் நயம் தோன்றி மக்கள் மனக்கொட்டத்தை அகற்றுபவை. முன் கூறப்பட்ட அதம நூல்களைக் கட்டுப்படுத்துவதனால்தான் அடுத்த இருவகை நூல்களை அதிகமான மக்கள் படித்துப் பயன் பெறுவர்.

வாழ்த்துரை

ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., M. L. A.,
தலைவர், பொன் விழாக்குழு.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராக நீண்ட காலம் பணியாற்ற எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. எனது பணி காலத்தில் நெல்லை நகர் நூலகம் படிப்படியாக அதிக அளவு வளர்ச்சியடைந்ததைக் கண்டேன். இந்நூலக விழாக்களில் கலந்துகொள்ள எனக்குப் பல முறை வாய்ப்புகள் கிடைத்தன. அவ்விழாக்களில் பொதுமக்கள் காட்டிய ஊக்கமும், ஆர்வமும், அளித்த உதவியும் ஒத்துழைப்பும் என்னை வெகுவாகக் கவர்ந்தன. நெல்லை மாவட்டத்தில் சிறந்த நூலகமாக நெல்லை நகர் நூலகம் தேர்ந்தெடுக்கப்பட்டு 1965-ல் தமிழக முதலமைச்சரால் இந்நூலகத்திற்கு வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப்பட்டுள்ளது.

பொன் விழா சிறப்புடன் நடைபெறவும், பொன்விழா மலர் வெளிவரவும், உதவியும் ஒத்துழைப்பும் அளித்த அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல பொது நிறுவனங்களின் தலைவரும், ஊக்கமும், ஆர்வமும் மிக்க செயல் வீரருமான உயர்திரு. A. P. C. வீரபாகு அவர்கள் தலைமையில் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு திறம்பட சிறப்புடன் பணியாற்றி வருகிறது.

நெல்லை நகர் பொது நூலகத்தைப் பொதுமக்கள் மேன்மேலும் நன்கு பயன்படுத்தித் தமிழ் நாட்டில் தலைசிறந்த நூலகமாகத் திகழ உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுகிறேன்.

கடந்த 50 ஆண்டுகளாகச் சிறந்த முறையில் அரும் பெரும் பணிகளையாற்றியுள்ள இந்நூலகத்தையும், நூலகப் பணியாளர்களையும் நெல்லை மக்களையும் பாராட்டுகிறேன்.

வளர்க நெல்லை நகர் நூலகம்!

உயர்க நெல்லை மக்கள்!!

என வாழ்த்துகிறேன்.

நன்றியுரை.

S. கல்யாணசுந்தரம் பிள்ளை,
செயலாளர், பொன் விழாக்குழு &
அதிபர், சென்ட்ரல் தியேட்டர் & S. K. பிக்சர்ஸ் etc.

முன்பு நெல்லை நகர் பொது நூலகத்தின் விழாக்களில் பலமுறை கலந்து கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதுண்டு. இம்முறை இந் நூலகத்தின் பொன் விழாக் குழுச் செயலாளராகப் பணியாற்றும் வாய்ப்பும் எனக்குக் கிடைத்திருக்கிறது.

இப் பொன் விழாவின் மூலம் கடந்த 50 ஆண்டுகளாக இந் நூலகம் மக்களுக்கு ஆற்றிய பணியை, மக்களுக்கு நன்கு உணர்த்த வாய்ப்பும், எதிர்காலத்தில் இந் நூலகத்தை மக்கள் நன்கு பயன்படுத்தித் தங்களையும் இந்நாட்டையும் உயர்த்திக்கொள்ள வேண்டும் என்ற நோக்கமும் ஏற்படுமென நம்புகிறேன்.

பொன் விழா சிறப்புடன் நடைபெறவும், பொன் விழா மலர் வெளிவரவும், விளம்பரங்கள் அளித்தும், நன்கொடைகள் வழங்கியும் வாழ்த்துக்கள், கட்டுரைகள், கவிதைகள் வழங்கியும், விழாவில் கலந்து சிறப்பித்தும், உதவியும் ஒத்துழைப்பும் நல்கியுமுள்ள அனைவருக்கும் எனது நன்றியையும் பொன் விழாக் குழுவின் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில் நூலக இயக்க வளர்ச்சியும் தேவையும்

உயர்திரு. A. P. C. வீரபாகு, B. A, அவர்கள்,
தலைவர், நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு.

இந்தியாவில் முதன் முதல் பொது நூலகச் சட்டத்தை அமுலாக்கிய பெருமை நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவையே சாரும். சென்னை அரசு, இந்தியாவில் முதன் முதலாக 1948ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டத்தை இயற்றியது. இச் சட்டம் 1950-ல் அமுலாக்கப்பட்டது. இச் சட்டத்தை தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டம் முதன் முதலாக அமுலாக்கியது.

சென்னை பொது நூலகச் சட்டம் அமுலாக்கப்பட்டு பதினாறு ஆண்டுகளுக்கு மேலாகிறது. இப்பதினாறு ஆண்டுகளில் நகரங்கள் முதல் பெரிய கிராமங்கள் வரை நூலகங்கள் திறக்கப்பட்டு ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடின்றி, தமிழக அரசு அளித்த இலவசக் கல்வியைப் போல், இலவச நூலகப் பணியும் சிறந்த முறையில் கற்றறிந்தவர்கள் அனைவருக்கும் கிடைக்கிறது. சிறிய கிராமங்களுக்குக் கூட நூல் வழங்கும் நிலையங்கள் மூலம் நூலகப் பணி கிடைக்கிறது. மக்களுக்கு கல்வி அறிவை இலவசமாகப் அளித்ததுடனில்லாது, அவ்வறிவை வளர்க்கவும், பொது அறிவைப் பெருக்கவும், மக்களின் சிந்தனை சக்தியைத் தூண்டவும், பல்துறையிலும் மக்களின் செயல் திறனை வளர்க்கவும் தமிழக அரசு திட்டமிட்டுச் செயலாக்கிய நூலக இயக்கம் பூரணமான நல்ல பலனை அளித்துள்ளது. இத்திட்டத்தால் அனைவருக்கும் சிறந்த, உயர்ந்த பல்பொருள் நூல்களையும், பத்திரிக்கைகளையும் எளிதில் இலவசமாக படிக்கவும், அறிவை வளர்க்கவும், பயனடையவும் வாய்ப்புகள் கிடைத்தன. தமிழ் நாட்டில் பொது நூலகங்களைப் பயன்படுத்தி அறிஞர்களானவர்கள், பயனடைந்து உயர்ந்தவர்கள் தொகை பல லட்சம். எதிர் காலத்தில் இப்பொது நூலகங்களைப் பயன்படுத்தி பயனடைய விரும்பவர்கள் தொகை பல கோடிக்கு உயரும்.

" நூலகங்களின் வளர்ச்சியே மக்களின் வளர்ச்சி
மக்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி "

நூலகம் மக்களின் அறிவுச் செல்வத்தை, சிந்தனையை, நற்பண்பை, செயல் திறத்தை வளர்க்கிறது. பின் இவை நாட்டின் பொருள் வளத்தை, தொழில் வளத்தை, நற்பண்புகளுள்ள சமுதாயத்தை உருவாக்குகின்றன. நாட்டின் சிறந்த எதிர்காலம் நூலகங்களின் கையிலிருக்கிறது. நூலகங்களைப் பயன்படுத்தி பயனடையவேண்டும் என்ற நோக்கமும், ஆர்வமும், அறிவுப் பசியும் மக்களிடையே

வளர்ந்து வருகின்றன. அதிக அளவு சிறந்த பல்துறை நூல்களையும், பத்திரிக்கைகளையும், வசதியுள்ள நூலகக் கட்டிடங்களையும் பொது மக்கள் பெரிதும் விரும்புவதுடன், வேண்டவும் செய்கின்றனர். ஆனால் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் பொது மக்களின் தேவைகளைப் பூரணமாகப் பூர்த்தி செய்ய இயலாது, வளர்ச்சியில் தடை ஏற்படுகிறது. நூலக இயக்கத்திற்குத் தேவைக்கேற்ப நிதி வழங்கி, நூலக இயக்கத்தை வளர்ச்சியடையச் செய்ய நூலக ஆணைக் குழுக்களும் அரசாங்கமும் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் வளர்ச்சியும் தேவைகளும்:-

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு தனது குறைந்த வருவாயில் அதிக அளவு நூலகங்களைத் திறமையாகவும் சிறப்பாகவும் இயக்கி வருகிறது. தற்பொழுது 104 நூலகங்களும் 26 நூல் வழங்கும் நிலையங்களும் சிறப்பாக பணியாற்றி வருகின்றன. இவ்வாண்டு மேலும் 6 நூலகங்கள் திறக்கப்பட விருக்கின்றன. பெண்களுக்கென்று ஒரு நூலகமும், குழந்தைகளுக்கென ஒரு தனி நூலகமும் திறக்கட்பட்டுள்ளன. நூலக வரி மூலம் ஆண்டிற்கு சுமார் ரூபாய் ஒரு லட்சமும் அரசாங்க மான்யம் மூலம் ரூபாய் ஒரு லட்சமும் கிடைக்கிறது. ரூபாய் மூன்று லட்சம் செலவில் மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. சுழலும் நூலகக் கார் வாங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் நூலகங்களைப் பயன் படுத்துபவர்கள் தொகையும், நூலக உறுப்பினர்கள் தொகையும் வெகுவாக உயர்ந்துள்ளது. மக்களின் தேவைகளும், நூலக ஆணைக்குழுவின் நிர்வாகச் செலவுகளும் அதிகம் உயர்ந்துள்ளது. பொதுமக்கள் அதிக அளவு பலதரப்பட்ட பத்திரிக்கைகளையும் விலை உயர்ந்த சிறந்த பல் பொருள் நூல்களையும் வேண்டுகின்றனர். அதிக அளவு புதிய நூல்களை வழங்க வேண்டுகின்றனர். நவீன வசதியுள்ள நூலகக் கட்டிடங்களை வேண்டுகின்றனர். நூல்கள் வீட்டு வாயிலிலேயே நூலகக் கார்கள் மூலம் கிடைக்க வேண்டுமென விரும்புகின்றனர். தேவைகள் பெருகியுள்ளன. நூலகங்களின் எண்ணிக்கையும், நூலகங்களைப் பயன் படுத்துபவர்கள் தொகையும் பெருகியுள்ளன. ஊழியர்கள் எண்ணிக்கை, ஊதியச் செலவு, நூல்களின் விலைகள், பத்திரிக்கைகளின் விலை, கட்டிட வாடகை, இதரச் செலவுகள் முதலியவை பல மடங்காக உயர்ந்துள்ளன. ஆனால் நூலக வரி உயரவில்லை. அரசாங்க மான்யத்தின் அளவும் உயரவில்லை. மக்களின் இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்து, எதிர்காலத் தேவைகளுக்கேற்ப திட்டங்களைத் தயாரித்து அமுலாக்காவிட்டால் நூலக இயக்கவளர்ச்சியும், நாட்டின் எதிர்காலமும் பாதிக்கப்படும்.

நெல்லை மாவட்டத்தில் தேவைப்படும் இடங்களிலெல்லாம் நூலகங்கள் திறக்கவும், திறக்கப்பட்ட நூலகங்களுக்கு, மக்கள் தேவைக்கு ஏற்ப அதிக அளவு நூல்கள், பத்திரிக்கைகள், தளவாடச் சாமன்கள் வழங்கவும் நவீன வசதியுள்ள நூலகக் கட்டிடங்கள் கட்டவும் நூலகங்களில் செய்திப்பட வசதி செய்யவும், சுழலும் நூலகக் கார்கள் மூலம் உறுப்பினர்கள் வீடுகளுக்கு நூல்கள் வழங்கவும் மற்றும் பல திட்டங்களை அமுலாக்கவும் போதிய நிதி வசதியில்லாதிருக்கிறது.

தமிழக நூலக ஆணைக்குழுக்கள்:-

தமிழ் நாட்டில் ஒரு சில நூலக ஆணைக்குழுக்களுக்கு தேவைக்கேற்ப வருவாய் உள்ளது. அவை அதிக அளவு நூலகங்கள் திறந்து அதிக அளவு நூல்கள் வழங்கி, நூலகக் கட்டிடங்கள் கட்டி சுழலும் நூலகத் திட்டத்தை அமுலாக்கியுள்ளன. வருவாய் குறைந்த மாவட்டங்கள், தேவைப்படும் இடங்களில்லெல்லாம் நூலகங்கள் திறக்க முடியாமலும் மக்கள் வேண்டும் அளவு அதிகம் புதிய நூல்கள் வழங்க முடியாமலும், நூலகக் கட்டிடங்கள் கட்ட முடியாமலும் பல முன்னேற்றத் திட்டங்களை அமுலாக்க முடியாமலும் இருக்கின்றன. ஆனால் தமிழ் நாட்டில் நூலக இயக்க வளர்ச்சியைக் கவனிப்பவர்கள் வருவாய் மிகுந்த மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்டு அம்மாவட்டத்தை மட்டும் பாராட்டுகின்றனர். மற்றைய மாவட்டங்கள் வளர்ச்சியில் முன்னணியில் இல்லாததற்கு நிதி வருவாய்க் குறைவே காரணம். நூலக இயக்கம் தமிழ் நாட்டில் ஒரே சீராக வளர்ச்சியடைய வேண்டும். அதுதான் உண்மையான வளர்ச்சி. நிதி வசதிமிக்க மாவட்டங்கள் முன்னணியிலும், நிதிவசதி குறைந்தவை பின் தங்கிய நிலையிலும் உள்ள குறையை உடன் நிவிர்த்தி செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1948-ம் ஆண்டு நிலையும், 1967-ம் ஆண்டு நிலையும்.

குழந்தை பிறந்த சமயம் அளிக்கும் உணவின் தன்மையும் அளவும் குழந்தை வளர, வளர கூட்டப்படுகிறது. 1948-ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டம் இயற்றப்பட்டு அமுலாக்கப்பட்ட சமயம் இருந்த நூலகங்கள், நூல்கள், பணியாளர்கள், ஊதிய விகிதம், நூல்கள், பத்திரிக்கைகள், தளவாடச் சாமான்கள், நூலகங்களைப் பயன்படுத்துபவர்கள், உறுப்பினர்கள் தொகை, கட்டிட வாடகைகள், இதரச் செலவுகள் முதலியவை எண்ணிக்கையிலும், விலையிலும் பலமடங்காக உயர்ந்துள்ளது. ஆனால் நூலக வரியும், அரசாங்க மான்யமும், 1948ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது. ஸ்தல ஸ்தாபனங்களின் வீட்டு வரிகள் சொத்துக்கள் உயர்வு காரணமாக நூலக வரி வருவாய் சிறிது உயர்ந்துள்ளது 1948-ம் ஆண்டு இருந்த நிலையையும் இப்பொழுது பல மடங்காக உயர்ந்துள்ள நூலகங்களின் எண்ணிக்கையையும், செலவுகளையும், பல லட்சமாக உயர்ந்துள்ள பார்வையாளர்களையும், உறுப்பினர்களையும், தேவைகளையும், எதிர்கால நலன்களையும் கருத்தில் கொண்டு நூலக வரியை உயர்த்தி, தேவைக்கேற்ப அரசு மான்யம் வழங்கி, தமிழ் நாட்டில் நூலக இயக்கம் ஒரே சீராக வளர்ச்சியடைய அரசும், நூலக ஆணைக்குழுக்களும் முயற்சிக்க வேண்டும். நிதி வசதியை பெருக்குவதின் மூலம் நூலக ஆணைக் குழுக்களின் பணி மென்மேலும் வளர்ச்சியடைந்து நாட்டின் எதிர்காலத்தை வளமுள்ளதாக்கும்.

பழுதடைந்த நூல்களைப் பைண்டிங் செய்வதில் பழைய நடைமுறைகள் காரணமாக நூலகங்களில் தேங்கியுள்ள பல ஆயிரம் நூல்களைப் பைண்டிங் செய்வதில் நீண்ட காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், ஏற்கனவே தேவைக் கேற்ப புதிய நூல்களை வழங்க முடியாத நிலையில் உள்ள நூலக ஆணைக் குழு

பழுதடைந்த நல்ல நூல்களையும் பைண்டிங் செய்து உறுப்பினர்களுக்கும் வாசகர் களுக்கும் வழங்க முடியாத பரிதாபகரமான நிலை ஏற்படுகிறது. எழுது பொருள்கள் வாங்குதல், பதிவேடுகள், நமூனுக்கள் அச்சிடுதல் போன்றவைகளிலும் இது போன்ற பழைய நடைமுறைகளால் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது.

நூலகப் பணியாளர்கள் :

நாட்டின் உயிர்நாடி போன்றவை பொது நூலகங்கள். நூலக இயக்க வளர்ச்சிக்கு அரசாங்கமும், நூலக ஆணைக் குழுக்களும் அமுலாக்கும் திட்டங்களை வெற்றியடையச் செய்வது நூலகப் பணியாளர்களின் பொறுப்பும் கடமையும் ஆகும். நூலகப் பணியாளர்களுக்கு மற்றைய அரசாங்கப் பணியாளர்களை விட வசதியும் வாய்ப்பும் அளிக்கப்பட வேண்டும். ஆனல் இன்று நூலகப் பணியாளர் களுக்கு அரசாங்கப் பணியாளர்களுக்கொப்ப வசதியும் வாய்ப்பும் அளிக்கப் படவில்லை.

தமிழ்நாட்டில் பொது நூலகங்களின் வளர்ச்சியையும் தேவைகளையும், எதிர்கால நலத்தையும் கருத்தில் கொண்டு கீழ்கண்ட திட்டங்களை அமுலாக்கி, தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

(1) நூலக வரியை உயர்த்துதல்

(2) அரசாங்க மான்யத்தை தேவைக்கேற்ப அதிகம் அளித்தல்

(3) சுழலும் நூலகக் கார்களும், செய்திப்படச் சாதனங்களும் வழங்குதல்.

(4) நவீன நூலகக் கட்டிடங்கள் கட்ட நிதி வசதி அளித்தல்.

(5) நூலகப் பணியாளர்களை அரசாங்கப் பணியாளர்களுக்குச் சமமாகக் கருதுவதுடன், பென்ஷன் வசதி, பல்கலைக்கழகத் தேர்வுகளில் தனிப்பட்ட முறையில் நேரடியாகக் கலந்து கொள்ள வாய்ப்பு, நீண்ட காலப் பணியும் திறமையும் உள்ளவர்கள் பதவி உயர்வு பெற வாய்ப்பு முதலிய வசதிகள் செய்தல்.

(6) நூல்கள் பைண்டிங், பதிவேடுகள், நமூனுக்கள் அச்சிடுதல், எழுது பொருள்கள், மற்றும் அவசியப் பொருள்கள் வாங்குதல் முதலியவற்றில் ஸ்தல மார்க்கெட்டில் டெண்டர் பெற்று உடன் செய்ய அனுமதியளித்தல்.

(7) வசூலித்த நூலக வரியைக் கட்டாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க நூலகச் சட்டத்தில் வழி வகை செய்தல்.

வாழ்க தமிழ்! வளர்க நூலக இயக்கம்!!
பெருகுக அறிவுச் செல்வம்!!!

வையம் வாழ

நெ. து. சுந்தர வடிவேலு·

பெறற்கரியது மானிடப் பிறவி. அவ்வரிய பிறவி நமக்குக் கிட்டியுள்ளது. இப்பிறவியை நன்முறையில் நடத்த வேண்டும். இதற்கு மனித உரு மட்டும் போதாது. மனித இயல்புகள் வளர வேண்டும்; மலர வேண்டும். அவற்றின் துணை கொண்டு வையத்துள் வாழ்வாங்கு வாழ வேண்டும்.

மனித நல்லியல்புகளை வளர்க்கும் வகை என்ன? அறிவு பெறுதல், வகை யாகும். அறிவு பெறும் வழி எது? கற்றல் அறிவு பெறும் வழி.

செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வமாகிய அறிவுச் செல்வத்தை, எவ்வளவு கல்வியால் பெறலாம்? தொடக்கக்கல்வி கொடுத்துவிடுமா, அறிவுச் செல்வத்தை? கொடாது. உயர்நிலைப்பள்ளிப் படிப்பு கொடுத்துவிடுமா, அறிவுச் செல்வம் அனைத்தையும்? கொடாது. கல்லூரிக் கல்வியும் அறிவுச் செல்வம் அவ்வளவையும் அடக்கிவிடாது.

அறிவு எல்லையற்றது. அது, வளர்ந்து கொண்டே இருப்பது; புதுப்புதுக் கோலம் கொள்வது, அதைப்பெற — போதிய அளவு பெற — காலமெல்லாம் கற்க வேண்டும்; இளமையிலும் கற்க வேண்டும். வாலிபத்திலும் கற்க வேண்டும். முதுமையிலும் கற்க வேண்டும். தொடக்கப் பள்ளியில் தொடங்கிய கல்வி, வீடு வரை தொடர வேண்டும். கல்வி நிலையத்தில் சேர்ந்திராத போதும், தாமே கற்று அறிவு பெறவேண்டும்.

தாமே கற்பது எதை? கண்டதைக் கற்கலாமா? ஆகாது. பின் எவற்றைக் கற்க? ஆளாக்கும் நூல்களைக் கற்க. தன்னம்பிக்கை யூட்டும் நூல்களைக் கற்க. தன்னூக்கம் வளர்க்கும் நூல்களைக் கற்க. தன் முயற்சிக்கு ஊக்கும் நூல்களைக் கற்க. இவற்றின் மூலம் ஆண்மை தரும் கல்வியைப் பெறுக.

ஆண்மை தரும் கல்வி, ஆற்றல் தரும் கல்வியாக இருத்தல் மட்டும் போதாது. வானமளந்ததனைத்தும் அளந்திடும் அறிவு தரும் கல்வியாகவும் இருத்தல் வேண்டும். வானிலும் விரிந்து, கடலினும் பரந்து வளரும் அறிவுத் துறையின் அடி முடிகளைக் காட்டும் நூல்களைக் கற்கவேண்டும். அறிவு ஊற்றுகளாகத் தொடங்கும் மக்கள் அறிவுத் தேக்கங்களாக, அறிவுக் கடல்களாக வளர வேண்டும்.

அறிவுப் பெருக்கின் பண்பு என்ன? ஈரமே மெய்யறிவின் பண்பு. 'பிறிதினைத் தன்னைப் போல் நோக்கும்' பண்பு, படர்ந்து கலந்து தழைக்க

வேண்டும். ஈரத்தை வளர்க்கும் நூல்களை, ஒருமைப்பாட்டினை உணர்த்தும் நூல்களை, மானிடத்தைப் போற்றும் நூல்களை, நல்லோர் மேற்கொண்ட நன்னெறி காட்டி, நல்வழி காட்டும் நூல்களை நிறையக் கற்க வேண்டும்.


இத்தகைய நூல்களை எல்லாம் கற்று, உருவத்தால் மனிதர்களாகப் பிறந்தோர் உள்ளத்தால் மனிதர்களாக, சொல்லால் மனிதர்களாக, நற்செயல்களால் மனிதர்களாக, வளர்ந்து, சிறந்து, வாழவேண்டும்.

ஒவ்வொருவரும், தனக்குத் தனக்கு ஒரு நூல் நிலையத்தை, பல துறை நூல்கள் கொண்ட நூல் நிலையத்தை அமைத்துக் கொள்ள இயலாது. பொது நூலகங்கள் பொதுமக்களின் தொடர் கல்விக்கு, தற்படிப்பிற்குத் துணை செய்ய வேண்டும். கல்விக் கூடங்கள் எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு இன்றியமையாதன, நூலகங்களும்.

ஊர் தோறும் நூலகம் தேவை. அந்நூலகங்கள் நூல் சேமிப்புக் கூடங்களாக நின்று விடாமல், நூல் வழங்கும் பணிமனைகளாகப் பயன்படவேண்டும். அவை நிறையப் படித்தவர்களுக்கும், பெருங்குடிகளுக்கும் மட்டும் ஏற்பட்டவையல்ல எல்லோர்க்கும் பயன்படவேண்டும். நாலெழுத்தே கற்றவர்க்கும் பயன்படவேண்டும். குடிசை வாழ்வோர்க்கும் பயன்பட வேண்டும். அத்தகைய முறையில், ஏராளமான நூலகங்கள் அமைய வேண்டும்; அதற்கேற்ற சூழ்நிலை உருவாக வேண்டும்; நாம் உருவாக்க வேண்டும்.

கல்வி நிலையங்களோடு, பொது நூலகங்களையும் பெருக்கிக் கொண்டால், இருவகையான அமைப்புகளும் தக்கமுறையில் நல்ல சூழ்நிலையோடு பணிபுரிந்தால், வீடு தோறும் கலையின் விளக்கத்தைக் காண்போம். ஊர் தோறும் ஈர நெஞ்சினர் பெருகுவர். நாடுதோறும் நல்லோர் நிறைவர். மானிடம் பிழைக்கும். வையம் வாழும்.

திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.,



★

எங்களது புதிய விற்பனை நிலையம் 14-9-67 அன்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் தலைமையில் மாண்புமிகு கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் M. A., அவர்களால் 91, கீழைத் தேர்த் தெருவில் திறக்கப்பட்டது.

எங்களிடம் நூல் நிலையத்திற்கு வேண்டிய தமிழ், ஆங்கில நூல்களும், சிறுவர்க்கான நூல்களும் தட்டாமல் கிடைக்கப்பெறும்.

★

பதிவுபெற்ற நிலையம்:

91, கீழைத் தேர்த் தெரு,
திருநெல்வேலி-6.

தலைமை நிலையம்:

1/40 பிராட்வே,
சென்னை-1.

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்

★ எழுத்தாளர்களின் தரமான படைப்புகளைத் தமிழ் உறவு நூல்கள் ஆக வெளியிடுகிறது.

★ எழுத்தாளர்கள் தங்கள் படைப்பின் முழுப் பயனையும் தாங்களே அடைய வழி செய்கிறது.

★ எழுத்தாளர்களின் பண்பாட்டு, லௌகிக, பொருளாதார நலன்களுக்கு உழைப்பதே குறிக்கோளாகக் கொண்டது.

★ வாசகர்களுக்கு இலக்கியச் செழுமை கொண்ட நல்ல தமிழ் நூல்கள் நியாயமான விலையில் கிடைக்கச் செய்கிறது.

187 தமிழ் எழுத்தளார்கள் ஏற்கெனவே
இக் கூட்டுறவில் உறுப்பினராக
இருக்கிறார்கள்

தமிழ் உறவு நூல்கள் பட்டியலுக்கும் மற்றும் விவரங்களுக்கும் :-

செயலாளர் :

தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட், X 417
8, சின்ன ரெட்டித் தெரு, சென்னை-8.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

செயலாளர் பொது அறிக்கை.

S. பேரின்பமுத்து, B. A., M. ED.,
செயலாளர், நூலக ஆணைக்குழு &
நெல்லை மாவட்ட மத்தியப் பகுதி கல்வித் தொண்டன்.

வரலாறு :-

பொதுமக்களுக்கு இலவசக்கல்வி வசதியை அளித்த நமது அரசு, பொது மக்களின் பொது அறிவை வளர்க்க, நாட்டின் அறிவுச் செல்வத்தைப் பெருக்க, பட்டணங்கள் முதல் பட்டிதொட்டி வரை நூலகப்பணி சீராகக் கிடைக்க, சிறந்த உயர்ந்த நூல்களும், பத்திரிக்கைகளும் எவருக்கும் எளிதில் இலவசமாகக் கிடைக்க, தமிழ்நாட்டில் திட்டமிட்ட சீரான, போதிய நிதி வசதியுள்ள நூலகத்துறை அவசியமெனக் கருதி 1948-ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டத்தை இயற்றி அமுலாக்கிற்று.

பொது நூலகச் சட்டம் :-

மாநில நூலகக்குழு:-

இச்சட்டப்படி கல்வித்துறை இயக்குநர் நூலகத்துறை இயக்குநராகவும் பணியாற்றுவார். மாநில நூலகக்குழுத் தலைவராகக் கல்வி அமைச்சர் பணியாற்று வார். ஸ்தலஸ்தாபன அமைச்சரும் கல்வித்துறைச் செயலாளரும் உறுப்பினர்கள். சட்டமன்றம் ஒரு பிரதிநிதியையும் சட்டமன்ற மேல்சபை ஒரு பிரதிநிதியையும் மாநில நூலகக் குழுவிற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பும். நான்கு உறுப்பினர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர். பல்கலைக்கழகங்கள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியையும், சென்னை, கேரள, கன்னட நூலகச் சங்கங்கள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியையும் அனுப்பும். நூலக இயக்குநரும், நூலக விசேஷ அதிகாரியும் மாநில நூலகக்குழு உறுப்பினர்களாக இருப்பார்கள். தமிழக மாநில மத்திய நூலகமாகச் சென்னை கன்னிமாரா பொது நூலகம் இயங்கும்.

மாவட்ட நூலக ஆணைக்குழு :-

மாவட்டத்திற்கொரு நூலக ஆணைக்குழு அமைக்கப்படும். மாவட்டக் கல்வி அதிகாரி இதன் செயலாளராகப் பணியாற்றுவார். ஒவ்வொரு தாலுகாவிற்கும் ஒரு பிரதிநிதியை அந்தத் தாலுகாவிலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் நூலக ஆணைக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கின்றனர். நகர மன்றங்கள் ஒவ்வொன்றும் ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கிறது. பத்து உறுப்பினர்கள் நூலகத்துறை இயக்குநரால் நியமிக்கப்படுகின்றனர். உறுப்பினர்களில் ஒருவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

வருவாய் :–

நகர மன்றங்களும், ஊராட்சி மன்றங்களும் நகர அமைப்புக் குழுக்களும் சொத்து, வீட்டு, வரிகளில் ரூபாய்க்கு மூன்று காசுகள் வீதம் நூலக வரி வசூலித்து நூலக நிதியில் செலுத்த வேண்டும். நூலக வரி வருவாய்க்குச் சம அளவு தொகையை அரசு மானியமாக அளிக்கிறது.

நிர்வாகம் :–

மக்கள் தொகை 5000க்கு மேற்பட்ட ஊர்களில் நூலகங்கள் திறத்தல், நூல்கள், தளவாடச்சாமான்கள், பத்திரிக்கைகள் வழங்குதல், பணியாளர்களை நியமித்தல், நூலக இயக்கத்தைப் பரப்பி நூலகங்களை நன்கு நிர்வகித்தல் முதலிய பணிகளை நூலக ஆணைக்குழு செய்கிறது.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு :–

துவக்கமும் வளர்ச்சியும்:-

1948-ம் ஆண்டு சென்னை பொது நூலகச் சட்டப்படி நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு 1950 முதல் செயல்படத் துவங்கியது. 1952-ம் ஆண்டு மே மாதம் பாளையங்கோட்டையில் மாவட்ட மத்திய நூலகம் திறக்கப்பட்டது. 1954-ம் ஆண்டு மார்ச் மாதம் சுரண்டை, நான்குனேரி ஊர்களில் இருகிளை நூலகங்கள் திறக்கப் பட்டன. தற்பொழுது 104 கிளை நூலகங்களையும், ஒரு மாவட்ட மத்திய நூலகத்தை யும், 27 நூல் வழங்கும் நிலையங்களையும் நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுத் திறம்பட நிர்வகித்து வருகிறது.

ஆண்டு தோறும் திறக்கப்பட்ட நூலகங்கள்

ஆண்டு	திறக்கப்பட்ட நூலகங்கள்		மொத்தம்
1952	1	மாவட்ட மத்திய நூலகம்	1
1954	2	கிளை நூலகங்கள்	3
1955	4		7
1956	3		10
1957	11		21
1958	19		40
1959	3		43
1960	3		46
1961	10		56
1962	8		64
1963	Nil.		
1964	10		74

ஆண்டு	திறக்கப்பட்ட நூலகங்கள்	மொத்தம்
1965	22	96
1966	8	104
1967	(6 Propsed to be opened)	

இவ்வாண்டு மேலும் திறக்க விருப்பவை 6 நூலகங்கள்.

நூலக ஆணைக்குழு நிதிமூலம் திறக்கப்பட்ட நூலகங்கள் :– 55

ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட நூலகங்கள் :– 49

வருவாய் :–

ஒரு ஆண்டிற்கு நூலக வரி மூலம் ரூபாய் ஒரு லட்சம் வசூலாகிறது. அரசாங்க மான்யம் ரூபாய் ஒரு லட்சம் கிடைக்கிறது. வசூலிக்கும் நூலக வரியை ஊராட்சி மன்றங்களும் நகர மன்றங்களும் பாக்கியின்றி உடனுக்குடன் செலுத்தினுல் நூலக வரி வருவாய் மேலும் சிறிது அதிகரிக்கும். ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திறக்கப்பட்ட நூலகங்களுக்கு, ஊதியம், பத்திரிக்கைகள் வாங்குதல், கட்டிட வாடகை முதலிய செலவுகளுக்கு அரசு மான்யம் அளிக்கிறது. நீண்ட காலமாய் இந் நூலகங்களுக்கு நூல்கள் வாங்க மான்யம் அளிக்கப்படாததால் நூல்கள் வழங்க முடியாத நிலை ஏற்பட்டு நூலக வளர்ச்சி தடைப்படுகிறது. இந் நூலகங்களுக்கு நூல்கள், தளவாடச் சாமான்கள் வாங்க மான்யம் அளிக்கப்பட வேண்டியது மிக அவசியம். தேவைப்படும் இடங்களிலெல்லாம் நூலகங்கள் திறக்கவும், மக்கள் தேவைக் கேற்ப அதிக அளவு நூல்கள், பத்திரிக்கைகள் வழங்கவும், நவீன வசதியுள்ள நூலகக் கட்டிடங்கள் கட்டவும் போதிய நிதி வசதி இல்லாதிருக்கிறது.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு குறைந்த வருவாயில் அதிக அளவு நூலகங்களைத் திறம்பட சிறப்பாக இயக்கி வருகிறது.

வளர்ச்சி :–

1952-ல் நூலகப் பணியை ஒரு நூலகத்துடன் துவக்கிய நூலக ஆணைக் குழு இன்று 104 நூலகங்களை நிர்வகிக்கிறது. அன்று பல ஆயிரம் மக்களால் பயன்படுத்தப்பட்ட நூலகங்கள் இன்று பல லட்சம் மக்களால் பயன்படுத்தப் படுகிறது.

வளர்ச்சி பற்றிய தற்பொழுதுள்ள புள்ளி விவரங்கள்:

1.	நூலகங்கள்	104
2.	நூல் வழங்கும் நிலையங்கள்	27
3.	நூல்கள் இருப்பு	2,07,570
4.	உறுப்பினர்கள்	22,000

வளர்ச்சி பற்றிய தற்பொழுதுள்ள புள்ளி விவரங்கள்:

5. ஆண்டு தோறும் நூலகங்களைப் பார்வையிடுபவர்கள் 25 லட்சம்

6. ஆண்டுதோறும் படிக்க வழங்கப்படும் நூல்கள் (L + C) 9,06,844

இலவச நூலகப் பணி, நூலக உறுப்பினர்கள் :—

நூலகத்தில் வைத்து நூல்கள், பத்திரிக்கைகள் படிக்க எவ்விதக் கட்டணமும் கிடையாது. நூல்களை வீட்டிற்கு எடுத்துச் சென்று படிக்க விரும்புகிறவர்கள் ஒரு நூல் எடுக்க ரூ. 3/-ம், இரு நூல்கள் எடுக்க ரூ. 5/-ம் காப்புத் தொகையாகக் கட்டி உறுப்பினராக வேண்டும். இத்தொகை வேண்டினால் திரும்ப அளிக்கப்படும். வேறு கட்டணம் கிடையாது.

சுழலும் நூலக வண்டி:—

மாவட்ட மத்திய நூலகத்திலிருந்து மூன்று சக்கர சைக்கிள் மூலம் நெல்லை, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகர மன்றப் பகுதியிலுள்ள நூலக உறுப்பினர்கள் வீடுகளுக்கு நேரடியாக நூல்கள் வழங்கப்படுகின்றன.

ஆசிரியைகளின் இலவச நூலகப் பணி:—

சுமார் 275 ஆசிரியைகள் எவ்வித ஊதியமும் இல்லாமல் நூலகங்களிலிருந்து நூல்களைப் பெற்று வீடுகளுக்குச் சென்று பெண்களுக்கு நேரடியாக நூல்கள் வழங்கி, படித்த பின் திரும்பப் பெற்று நூலகத்தில் சேர்க்கும் இலவச நூலகப் பணித் திட்டத்தில் சேர்ந்துள்ளனர்.

பெண்கள் நூலகம்:—

பெண்களுக்கென ஒரு தனி நூலகம் பாளையங்கோட்டை பெருமாள்புரத்தில் திறக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் நூலகம்:—

குழந்தைகளுக்கென ஒரு தனி நூலகம் பாளையங்கோட்டை சிறுவர்கள் அரங்கின் அருகே திறக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மத்திய நூலகக் கட்டிடம்:—

பாளையங்கோட்டை நகர மன்றம் கரையாளர் நூலகத்தைக் கட்டிடத்துடன் நூலக ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க முன்வந்துள்ளது. அரசின் அனுமதி கிடைத்ததும் மாவட்ட மத்திய நூலகத்தைக் கரையாளர் நூலகக் கட்டிடத்திற்கு மாற்றவும், அக்கட்டிடத்திற்கு அருகில் உள்ள புறம்போக்கு நிலத்தை ஜாரி செய்து ரூபாய் மூன்று லட்சம் செலவில் தற்போதைய கட்டிடத்துடன் இணைத்து நவீன நூலகக் கட்டிடம் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது.

சுழலும் நூலகம்:—

நாடு நகரமெல்லாம் நூலக இயக்கம் நன்கு பரவவும், குறைந்த அளவுள்ள சிறந்த நூல்களைப் பெரும்பான்மையினர் பயன்படுத்தவும் நகரப் பகுதியில் உள்ள நூலக உறுப்பினர்களின் வீட்டு வாசலிலேயே நூலகப் பணி கிடைக்கவும் சுழலும் நூலக வண்டி (Van) வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள்:—

நூலக வருவாயை அதிகரிக்கவும் நூலக வசதியில்லாத ஊரில்லை என்ற நிலையை ஏற்படுத்தவும், திறக்கப்பட்டு இயங்கி வரும் நூலகங்களை மேன்மேலும் பல லட்சம் மக்கள் படித்துப் பயன்பெறவும் நூலக உறுப்பினர்கள் தொகையை 50,000 ஆக உயர்த்தவும் பொது மக்களின் தேவைக்கேற்ப அதிக அளவு நூல்களும் பத்திரிக்கைகளும் வழங்கவும், நவீன நூலகக் கட்டிடங்கள் கட்டவும், உறுப்பினர்கள் வீடுகளுக்குச் சுழலும் நூலக வண்டி (Van) மூலம் நூல்கள் வழங்கவும் நூலக இயக்கப் பணியில் தமிழ் நாட்டில் நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு முதன்மை நிலை வகிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

S. பேரின்பமுத்து
செயலாளர்.

"தேன்"

தேன் இனிமையானது, நல்ல மருந்து, உணவும் கூட. தேனீக்களால் சேகரிக்கப் பெற்றது தேன். ஒருவகை ஈயாகிய தேன் ஈயால் மருந்தைத் தேடிக் கொணரமுடிகிறது. உணவைத் தேடித்தர முடிகிறது. ஆனால் மனிதனோ இந்த இரண்டிலும் தன் முயற்சியற்றவனாக இருக்கிறான். ஏன்? தேனீ சுறுசுறுப்பாக சுற்றித் திரிகிறது. மனிதனோ சோம்பித் திரிகின்றான். தேனீ சுற்றுகிறது.– எங்கெங்கே? குப்பை மேட்டிலா? – இல்லை. மணமும் தேனும் உள்ள பூக்களைச்சுற்றி. தேனீயின் உறவு - தேன் உள்ள பூக்களோடு பொய்யுறவா? – இல்லை. உளம் கலந்த உறவு – விளைவாக துளிதுளிகளாக தேன் கிடைக்கிறது. மனிதனும் முயன்றால் இனியன காணலாம் – படைக்கலாம். வாழும் இந்த சமுதாயத்திற்கு மருந்தாகப் பயன் படலாம். அதற்கு அவன் வளர வேண்டும். $5\frac{1}{2}$ அடி உயரமுடையவன் $6\frac{1}{2}$ அடி உயரமாக வளர்வதை நாம் குறிப்பிடவில்லை. அவனுடைய உள்ளம் வளர வேண்டும். மனம் வளரவேண்டும். அதற்கு மருந்துக் கடைகளில் மருந்து கிடைக்காது. ஆனால் புத்தகக் கடைகளில் கிடைக்கும். அங்கு தேடி எடுக்க வேண்டும். நல்ல புத்தகங்கள் நல்ல மலர்களுக்குச் சமம். மலர்களைவிட உயர்வுடையன. நல்ல புத்தகங்களில் ஈடுபாடுகொண்டு படித்துப் பெறும் அறிவும் உணர்வும் தேனைவிட அதிகச் சுவை தரும். இனிமை நல்கும். மனிதன் மனமுடையவன், அறிவுப் புலனுடையவன். இவ்விரண்டுமே மனித உலகத்தின் ஈடு இணையற்ற கருவிகள். இந்த இரண்டையும் முறையாகப் பயன்படுத்தும் திறன் சிந்தித்தல் – கற்றல் – கேட்டல் ஆகிய பயிற்சிகளில் பெறமுடியும். மனிதன் உண்பதைவிட இனிய கடமையாக கற்றலைக் கைக்கொள்ள வேண்டும். தண்ணீர் பருகுதலைப் போல கேட்டலை ஒரு கடமையாகக் கொள்ள வேண்டும். உயர்த்தலை போல உணர்தலை கடமையாகக் கொள்ள வேண்டும். அதுபோது அவன் வளர்வான். எல்லா வகையிலும் வளர்வான். கம்பன் – வள்ளுவர் – இளங்கோ ஆகியோர் நம்முடைய உள்ளத்தை வளர்க்கும் காவியக் கருத்துணவு படைத்தவர்கள். இன்னும் சில சான்றோர் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சுதந்திர அரசு நம்முடைய அக – புற வளர்ச்சிக்கெனப் பல்வேறு துறைகளில் கடமையியற்றும் வகையில் நூலகத் துறையிலும் அக்கரை காட்டி ஊர்தோறும் நூலகம் அமைத்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்திலும் நூலக இயக்கம் வளர்ந்து வந்துள்ளது. பொன் விழாவும் கொண்டாடுகிறது. இந்த வளர்ச்சி மகிழ்ச்சிக்குரியதே யானாலும் நூலக இயக்கம் மேலும் மேலும் வளரவேண்டும். அத் துறையில் பொன்விழா எடுக்கும் திருநெல்வேலி மாவட்ட நூலகக் குழுவினர் மேலும் முயல்வார்கள் என்பது நமது நம்பிக்கை. வளர்க நூலகம். மலர்க நல்லறிவு. பொலிக புதுமைச் சமுதாயம்.

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு.

1. உயர்திரு A. P. C. வீரபாகு B. A., தலைவர்.

2. ,, S. பேரின்பமுத்து B. A., M. Ed.
செயலாளர் & நெல்லை மாவட்ட மத்தியப் பகுதி கல்வி அதிகாரி.

3. ,, S. A. சுப்பிரமணியம் B. A., L. T.
நெல்லை மாவட்ட தென்பகுதி கல்வி அதிகாரி.

4. ,, நடேச பிள்ளை M. A., L. T.
நெல்லை மாவட்ட வடபகுதி கல்வி அதிகாரி.

5. ,, M. D. K. இராமலிங்க முதலியார்,
தலைவர், நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்கு.

6. ,, J. வேதசிரோன்மணி M. A., B. L.
முதல்வர், புனித யோவான் கல்லூரி.

7. திருமதி அம்மணி சுப்பிரமணியம் B. Sc., M. Ed.
தலைமை ஆசிரியை, ஸ்ரீ காந்திமதி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

8. உயர்திரு P. சுப்பையா,
தலைவர், வடக்கு காருகுறிச்சி ஊராட்சி மன்றம்.

9. ,, C. அருணாசல முதலியார், B. A., L. T.
தலைமை ஆசிரியர், நெல்லை நகர்மன்ற உயர்நிலைப்பள்ளி, பேட்டை.

10. ,, S. குருநாதய்யர்,
செயலாளர், ஸ்ரீ கோபாலகிருஷ்ண பிள்ளை நூலகம்,
சாத்தான்குளம்.

11. ,, இராஜகோபால் ரெட்டியார்,
தலைவர், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியப்பு.

12. ,, S. கணபதியா பிள்ளை,
தலைவர், பாளையங்கோட்டை நகர்மன்றம்.

13. ,, M. சூரியநாராயணன்,
உறுப்பினர், நெல்லை நகர்மன்றம்.

14. ,, P. M. மொகைதீன் மஸ்தான்,
உறுப்பினர், மேலப்பாளையம் நகர்மன்றம்.

15. ,, G. பிச்சையா பிள்ளை,
தலைவர், இலஞ்சி ஊராட்சி மன்றம்.

16. ,, K. சுந்தரராஜன்,
தலைவர், முள்ளிகுளம் ஊராட்சி மன்றம்.

17. ,, A. G. பெருமாள்,
தலைவர், ஒட்டநத்தம் ஊராட்சி மன்றம்.

18. ,, பெரியநாயகம்,
தலைவர், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிப்பு.

19. ,, M. A. கணேச பாண்டியன்,
தலைவர், பள்ளக்குறிச்சி ஊராட்சி மன்றம், சுந்தன்கோட்டை.

20. ,, N. துரைப்பாண்டியன், **M. L. A.**
தலைவர், நாடார் உவரி ஊராட்சி மன்றம்.

21. ,, S. இசக்கிமுத்துப் பாண்டியன்,
தலைவர், சேரன்மாதேவி ஊராட்சி ஒன்றிப்பு.

22. ,, S. T. நிக்கலொலஸ்
உறுப்பினர், தூத்துக்குடி நகர மன்றம்.

23. ,, S. S. மாணிக்கம்
,, ,,

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு.

தலைவர்கள்

உயர்திரு.	P. சுப்பிரமணிய பிள்ளை B. A., B. L.,	1950—1953.
,,	I. K. சுப்பிரமணிய பிள்ளை B. A., M. L. A.	1954 - 1957.
,,	I. A. சிதம்பரம் பிள்ளை M. A. M. L. C.	1957—1966.
,,	A. P. C. வீரபாகு B. A., M. L A.	1966 முதல்.

செயலாளர்கள்

உயர்திரு.	K. கோபாலன் M. A., MSc., B. T.	முன்னாள்
,,	பெருமாள் M. A., B. T.	,,
,,	R. பாலகிருஷ்ணன் B. A., L. T.	,,
,,	K. வெங்கடசுப்பிரமணியம் M. A., B. T.	,,
,,	B. ராமசுப்பிரமணிய பிள்ளை M. Sc., L. T.	,,
,,	A. R. கான் B. Sc., L. T.,	,,
,,	J. A. ரைட் M. A., M. Ed.	,,
,,	S. நல்லகண்ணு B. A., B. T. (பொறுப்பு)	,,
,,	M. பரமேஸ்வரன் பிள்ளை B. A., L. T.	,,
,,	S. பேரின்பமுத்து B. A., M Ed.,	24—4—67 முதல்

நூலக மேற்பார்வையாளர்கள்

உயர்திரு.	S. மானேந்தியப்பன் B A., L. T.	முன்னாள்
,,	N. சடகோபன் B A., L. T.	,,
,,	தெ. சு. மீனுட்சிசுந்தரன்	,,
,,	M. முத்துவேலு B. A , B. T.	20—8—67 முதல்

நெல்லை நகர் பொது நூலகம் பொன்விழாக்குழு.

1. உயர்திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை M. A., M L. A. தலைவர், விழாக்குழு

2. ,, A. P. C. வீரபாகு B. A.,
தலைவர், நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு &
பொன் விழா மலர்க் குழு.

3. ,, S. கல்யாணசுந்தரம் பிள்ளை செயலாளர், விழாக்குழு

4. ,, S. பேரின்பமுத்து B. A., M. Ed.,
செயலாளர், நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு &
நெல்லை மாவட்ட மத்தியப் பகுதி கல்வி அதிகாரி.

5. ,, M. D. K. இராமலிங்க முதலியார்,
தலைவர், நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்கு.

6. ,, J. வேதசிரோன்மணி M. A., B. L.
முதல்வர், புனித யோவான் கல்லூரி, பாளையங்கோட்டை.

7. ,, C. அருணாசல முதலியார், B. A., L. T.
தலைமை ஆசிரியர், நெல்லை நகர்மன்ற உயர்நிலைப்பள்ளி, பேட்டை.

8. திருமதி அம்மணி சுப்பிரமணியம் B. Sc., M. Ed.
தலைமை ஆசிரியை, ஸ்ரீ காந்திமதி பெண்கள் உயர்நிலைப்பள்ளி,
பாளையங்கோட்டை.

9. உயர்திரு S. குருநாதய்யர்,
செயலாளர், ஸ்ரீ கோபாலகிருஷ்ண பிள்ளை நூலகம்,
சாத்தான்குளம்.

10. ,, P. சுப்பையா,
தலைவர், வடக்கு காருகுறிச்சி ஊராட்சி மன்றம்

11. உயர்திரு இராஜகோபால் ரெட்டியார்,
தலைவர், பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றிப்பு.

12. ,, S. கணபதியா பிள்ளை,
தலைவர், பாளையங்கோட்டை நகர்மன்றம்.

13. ,, M. சூரியநாராயணன்,
உறுப்பினர், நெல்லை நகர்மன்றம்.

14. ,, P. M. மொகைதீன் மஸ்தான்,
உறுப்பினர், மேலப்பாளையம் நகர்மன்றம்.

15. ,, K. சுந்தரராஜன்,
தலைவர், முள்ளிகுளம் ஊராட்சி மன்றம்.

16. ,, G. பிச்சையாப் பிள்ளை,
தலைவர், இலஞ்சி ஊராட்சி மன்றம்.

17. ,, S. இசக்கிமுத்துப் பாண்டியன்,
தலைவர், சேரன்மகாதேவி ஊராட்சி ஒன்றிப்பு.

18. ,, N. துரைப்பாண்டியன், M. L. A.
தலைவர், நாடார் உவரி ஊராட்சி மன்றம்.

19. ,, M. A. கணேச பாண்டியன்,
தலைவர், பள்ளக்குறிச்சி ஊராட்சி மன்றம், சுந்தன்கோட்டை.

20. ,, A. G. பெருமாள்,
தலைவர், ஓணமாக்குளம் ஊராட்சி மன்றம்

21. ,, S. T. நிக்கலஸ்
உறுப்பினர், தூத்துக்குடி நகர மன்றம்.

22. ,, S. S. மாணிக்கம் ,, ,,

23. உயர்திரு பெரியநாயகம்,
தலைவர், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றிப்பு.

24. ,, M. இராமசுப்பிரமணிய அய்யர்
பாத்திர வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

25. ,, S. கந்தசாமியா பிள்ளை
பார்ட்னர்: S. K. பிக்சர்ஸ், திருநெல்வேலி டவுண்.

26. ,, S. S. அருணாசலம் பிள்ளை
உரிமையாளர்: கணபதி மில்ஸ், திருநெல்வேலி-6.

27. ,, S. S. A. O. R. சண்முகவேலாயுதம் பிள்ளை
பலசரக்கு மாளிகை, திருநெல்வேலி டவுண்.

28. ,, ந. சு. மீனாக்ஷிசுந்தரம் பிள்ளை
ஜவுளி வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

29. ,, ச. சோமசுந்தரம் செட்டியார்
ஜுவல்லரி மார்ட், திருநெல்வேலி டவுண்.

30. ,, M. S. கந்தசாமி நாடார்
கமிஷன் வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

31. ,, இராச. சண்முகசுந்தரம்
ஸ்ரீ மாதேஸ்வரன் மர வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

32. ,, P. சிவசுப்பிரமணியம்
ஜவுளி வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

33. ,, S. A. கோமதிநாயகம் பிள்ளை
அரிசி வியாபாரம், திருநெல்வேலி டவுண்.

34. ,, L. குற்றாலிங்கம் செட்டியார்
லிங்கம் & Co., திருநெல்வேலி ஜங்ஷன்.

35. உயர்திரு M. A. மஜீத்

தலைவர், நெல்லை நகர் மன்றம்.

36. ,, A. L. சுப்பிரமணியம் B. Sc., B. L., M. L. A.,

37. ,, தொண்டர் பெரிய நம்பி

பாத்திர வியாபாரம் & கஸ்தூரி லாட்ஜ், திருநெல்வேலி ஜங்ஷன்.

38. ஜனாப் M. M. பீர்முகமது M. L. A.

39. உயர்திரு P. இலக்குமணன்

உறுப்பினர், நெல்லை நகர் மன்றம்.

40. ,, K. சிவராமன் B. Sc.,

தலைவர், காமாட்சியம்மன் தொழிலாளர் கூட்டுறவு
பாத்திர உற்பத்தி நிலையம், திருநெல்வேலி டவுண்.

நெல்லை நகர் பொது நூலகத்தின்
பொன் விழா வைபவத்திற்கு
எங்கள்

நல் வாழ்த்துக்கள்

★

தெக்ஷிண மாற நாடார் சங்கம்,

70/410, சாலைத் தெரு,
சிந்துபூந்துறை,
திருநெல்வேலி ஜங்ஷன்.

டெலிபோன் நிர். 202.

நூல் நிலையம்

வே. தில்லைநாயகம், சென்னை.

1 அமைதி விளைத்திடும்
அறிவு பெருக்கிடும்
அன்பாம் நூல்நிலையம்! — நல்
ஆர்வம் சேர்த்திடும்
ஆனந்த மூட்டிடும்
ஆய்வாம் நூல்நிலையம்!

2 இலக்கியம் காட்டிடும்
இன்சுவை கூட்டிடும்
இனிதாம் நூல்நிலையம்! — நல்
ஈனம் விலக்கிடும்
ஈகை வளர்த்திடும்
ஈடாம் நூல்நிலையம்!

3 உண்மை விளக்கிடும்
உலகம் அளந்திடும்
உத்தம நூல்நிலையம்! — நல்
ஊக்கம் ஊட்டிடும்
ஊறுகள் நீக்கிடும்
ஊனமில் நூல்நிலையம்!

4 எல்லாம் இயம்பிடும்
எழுச்சி ஊட்டிடும்
எழிலாம் நூல்நிலையம்! — நல்
ஏற்றம் சேர்த்திடும்
ஏழிசை இசைத்திடும்
ஏதமில் நூல்நிலையம்!

5 ஐக்கியம் பேசிடும்
ஐயம் தீர்ந்திடும்
ஐந்திணை நூல்நிலையம்! — நல்
ஒற்றுமை உரைத்திடும்
ஓர்ந்திட உதவிடும்
ஔவையாம் நூல்நிலையம்

6 கதைகள் கூறிடும்
கற்பனை சேர்த்திடும்
கண்கவர் நூல்நிலையம்! — தொல்
சரித்திரம் சாற்றிடும்
சாத்திரம் விரித்திடும்
சாந்தியாம் நூல்நிலையம்!

7 தன்னையே தந்திடும்
தாழ்வுகள் அகற்றிடும்
தாயாம் நூல்நிலையம்! — வெகு
நல்லன நவின்றிடும்
நன்மை விளைத்திடும்
நன்குணர் நூல்நிலையம்!

8 பண்பு பரப்பிடும்
பாரதம் போற்றிடும்
பைந்தமிழ் நூல்நிலையம்! — திண்ண
மண்ணியல் காட்டிடும்
மானிடம் போற்றிடும்
மாண்பாம் நூல்நிலையம்!

9 வந்தவர் போற்றிடும்
வளர்ந்திட உதவிடும்
வனப்பாம் நூல்நிலையம்! — வீண்
வம்புகள் தீர்த்திடும்
வந்தனை வளர்த்திடும்
வள்ளலாம் நூல்நிலையம்!



சுவையான தமிழ் நூல்கள்

வெளியிடுவோர்

விற்பனையாளர்கள்

★ ★

வானதி பதிப்பகம்

82/11, பாண்டி பஜார்

தி. நகர் :: சென்னை-17.

டெலிபோன் எண் 442810.

நெல்லை நகர்ப் பொது நூலகம்

D. வெங்கடாசலம்,
நூலகர், நெல்லை நகர்.

நெல்லை நகர்ப் பொது நூலகம் 1917–ல் நெல்லை நகர மன்றத்தால் திறக்கப்பட்டது. நகர் மன்ற நிர்வாகத்தில் உள்ள காலத்தில் நகர மன்ற முன்னாள் தலைவர் காலஞ் சென்ற உயர்திரு. ப. ராமசாமி அவர்கள் பெருமுயற்சியால் தமிழ் நாட்டில் எந்த நூலகத்திலும் காணக்கிடைக்காத அரும் பெரும் சிறந்த நூல்கள் இந்நூலகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

கவிக்குயில் திருமதி சரோஜினி நாயுடு

தற்பொழுது நூலகம் இருக்கும் பழைய கட்டிடப் பகுதி நகர் மன்ற முன்னாள் ஆணையாளர் காலஞ் சென்ற உயர்திரு. ராமதாஸ் நாயுடு அவர்கள் பெருமுயற்சியால் கட்டப்பட்டு 1940-ல் இந்தியக் கவிக்குயில் திருமதி. சரோஜினி நாயுடு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டிடம் நெல்லை நகர் நேதாஜி போஸ் மார்க்கட் மாடியில் உள்ளது. நெல்லை நகர் பொது நூலகத்தை 1—5—1955-ல் நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு ஏற்று சிறப்புடன் நடத்தி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் இந் நூலகம் பல்துறையிலும் அதிக அளவு வளர்ச்சியடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளில் இந்நூலக தினசரி பார்வையாளர்கள், உறுப்பினர்கள் வழங்கப்படும் நூல்கள், நூல்கள் இருப்பு, வாங்கப்படும் பத்திரிக்கைகளின் எண்ணிக்கை முதலியவை பல மடங்காக உயர்ந்துள்ளது. இன்று நெல்லை நகர் நூலகம் நூலகப் பணியில் நெல்லை மாவட்டத்தில் முன்னிலையில் நிற்கிறது. நெல்லை நகர் நூலகம் நெல்லை மாவட்டத்தில் தலைசிறந்த நூலகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலமைச்சரால் வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப் பட்டுள்ளது. இந்நூலக நூல்கள் யாவும் கோலன் முறைப்படி பொருள் வாரியாகப் பகுக்கப்பட்டு, நூல் அட்டவணை அட்டை எழுதப்பட்டுள்ளன. விரைவில் உறுப்பினர்களுக்கு டிக்கட் முறைப்படி நூல்கள் வழங்கும் திட்டம் அமுலாக்கப்பட விருக்கிறது.

மாண்புமிகு அமைச்சர் உயர்திரு மு. கருணாநிதி

இந்நூலகத்தின் சிறந்த வளர்ச்சியையும் தேவையையும் கண்டு, நெல்லை நகர மன்றம் பெரும் முயற்சி செய்து ரூ. 20,000 செலவில் தற்போதைய நூலகக் கட்டிடத்திற்கு எதிரில் உள்ள மாடியில் புதிய கட்டிடம் கட்டி பொன்விழாப் பரிசாக வாடகைக்கு வழங்கியுள்ளார்கள்.

புதிய கட்டிடத்தைத் தமிழக மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் உயர்திரு. மு. கருணாநிதி அவர்கள் 27—8—1967 அன்று திறந்து வைத்தார்கள். பழைய கட்டிடப் பகுதியில் நூல்கள் அறையும், புதிய கட்டிடப் பகுதியில் பத்திரிக்கைகள் பகுதியும் இயங்குகிறது.

நெல்லை நகர் நூலக வளர்ச்சி விவரங்கள்.

1. நூல்கள் இருப்பு 10567.
2. உறுப்பினர்கள் 1318.
3. ஆண்டு ஒன்றுக்குப் பார்வையாளர்கள் 163927.
4. ,, வழங்கப்படும் நூல்கள் (L+C) 69610.

இந்நூலகம் மேலும் வளர்ச்சியடையவும் நூலகப்பணி அனைவருக்கும் கிடைக்கவும் பொதுமக்கள் இந்நூலகத்தைத் தினமும் பயன்படுத்துவதுடன் ஒவ்வொருவரும் நூலக உறுப்பினராகவும் வேண்டுகிறேன்.

நெல்லை நூலக நண்பர்கள் சங்கம்

K. செல்லப்பெருமாள்

நெல்லை நகர்பொது நூலகம் மேன்மேலும் வளர்ச்சியடையவும், நூலகப் பணியை மக்கள் நன்கு பயன் படுத்தவும், நூலகப் பணியாளர்களுடன் ஒத்துழைத்து பல திட்டங்களை நிறைவேற்றவும் நெல்லை நூலக நண்பர்கள் சங்கம் 1960-ல் துவக்கப்பட்டது.

நெல்லை நூலக நண்பர்கள் சங்கத்தின் நோக்கங்கள்

1. நூலக விழாக்கள் மூலம் நூலகப் பணியை பொதுமக்களிடம் பரப்பி, பார்வையாளர்களையும், உறுப்பினர்களையும் அதிகரித்தல்.

2. நூலகத்திற்கு நூல்களையும், தளவாடச் சாமான்களையும் நன்கொடைகளாகப் பெறுதல்.

3. நூலகத்திற்கு அதிக அளவு நூல்களும், பத்திரிக்கைகளும் வழங்க முயற்சித்தல்.

நெல்லை நூலக நண்பர்கள் சங்கத்தின் பொதுப் பணிகளில் சில:—

1. நெல்லை நகர நூலக உறுப்பினர்கள் தொகை உயர்ந்துள்ளது
2. ,, ,, பார்வையாளர்கள் தொகை உயர்ந்துள்ளது.
3. ,, ,, நூல்கள் இருப்பு உயர்ந்துள்ளது.
4. வழங்கப்படும் பத்திரிக்கைகள் அதிகரித்துள்ளன.
5. பெருமுயற்சி செய்து, நெல்லை நகர்மன்றம் மூலம் நூலகக் கட்டிடம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.
6. 7 குழல் விளக்குகள், எவர் சில்வர் டம்ளர் நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளன.
7. அதிக அளவு நூல்கள் நன்கொடையாகயாக வழங்கப்பட்டுள்ளன.
8. பொன் மொழிகள் எழுதிய தகடுகள் நன்கொடையாக வழங்கப் பட்டுள்ளன.
9. ஜவஹர்லால் நேரு, மகாத்மா காந்தி, வள்ளுவர், உயர்திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., M L. A., Dr. இராதாகிருஷ்ணன், வ. உ. சிதம்பரனார், பாரதியார் முதலியோரின் விலை அதிகமுள்ள பெரிய வண்ணப் படங்கள் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட விழாக்களை சிறப்புடன் நடத்தி பொதுமக்களின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

1. நேரு படத் திறப்பு விழா.
2. மகாத்மா காந்தி படத்திறப்பு விழா.
3. வள்ளுவர் படத் திறப்பு விழா.
4. Dr. இராதாகிருஷ்ணன் படத் திறப்பு விழா.
5. உயர் திரு. ஐ, ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., M. L. A, படத் திறப்பு விழா.
6. உயர் திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, M. A., M. L. A., அவர்களுக்கு பாராட்டு விழா.
7. உயர் திரு. A. P. C. வீரபாகு, B. A., அவர்களுக்கு வரவேற்பு விழா.
8. நூலக விழாக்கள்.
9. புத்தகக் கண் காட்சிகள்.
10. சொற்பொழிவு மன்றத் துவக்க விழா.
11. பிரிட்டன் — செய்திப்பட விழா.

மற்றும் பல.

நெல்லை நகர் பொது நூலகம் நெல்லை மாவட்டத்தில் சிறந்த நூலகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வெள்ளிக் கேடயம் பரிசளிக்கப்பட்டுள்ளது.

நெல்லை நூலக நண்பர்கள் சங்கம் நெல்லை நகர் பொது நூலகப் பொன் விழாவைச் சிறப்பாகக் கொண்டாடவும், பொன்விழா மலர் வெளியிடவும் நெல்லைப் பெரியோர்கள் உதவியுடன் பொன் விழாக்குழு அமைத்து ஒத்துழைத்துள்ளது.

நெல்லை நகர் பொது நூலகப்பணியில் நெல்லை நூலக நண்பர்கள் சங்கத்திற்கு நெல்லைப் பெருமக்கள் அளித்து வரும் உதவிகளுக்கும் ஒத்துழைப்பிற்கும் நெல்லை நூலக நண்பர்கள் சங்கம் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.

நெல்லை நகர் பொது நூலகத்தைப் பொதுமக்கள் மேன்மேலும் தினமும் நன்கு பயன்படுத்தவும், ஒவ்வொருவரும் நூலக உறுப்பினராகவும், தாங்கள் சொந்தமாக வாங்கிப் படித்து விட்டு வைத்துள்ள நூல்களையும், தளவாடச் சாமான்களையும் நூலகத்திற்கு நன்கொடையாக வழங்கி, நூலகப் பணிக்கு உதவியும் ஒத்துழைப்பும், அளிப்பதுடன் நெல்லை நூலக நண்பர்கள் சங்கத்திற்கு உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுகிறோம்.

நெல்லை நகர மன்றத்திற்கு நன்றி

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் நெல்லை நகர் பொது நூலக வளர்ச்சியில் ஆர்வமும் ஊக்கமும் காட்டி, பெரு முயற்சி செய்து அதிக அளவு பொருள் செலவிட்டு நூலகத்தின் எதிரில் உள்ள மாடியில் அதிகப்படியாக ஒரு புதிய கட்டிடம் கட்டி நூலகத்திற்கு நெல்லை நகர் நூலகப் பொன் விழாப் பரிசாக வாடகைக்கு அளித்தமைக்கு, நெல்லை நகர்மன்றத் தலைவர் உயர்திரு. மஜீத் அவர்களுக்கும், ஆணையாளர் உயர்திரு. கே. பீர்முகமது அவர்களுக்கும், நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், நெல்லை மக்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். நெல்லை நகரமன்றமும் நெல்லை மக்களும் இந்நூலகம் மேன்மேலும் வளர்ச்சியடைய நீடித்து உதவியும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டுகிறோம்.


S. பேரின்பமுத்து
செயலாளர்
நூலக ஆணைக்குழு &
நெல்லை மாவட்ட மத்தியப் பகுதி
கல்வி அதிகாரி

A. P. C. வீரபாகு
தலைவர்
நெல்லை மாவட்ட
நூலக ஆணைக்குழு

நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழு

நூலகங்கள் பணியாற்றும் இடங்கள்.

1	மாவட்ட மத்திய நூலகம், பாளையங்கோட்டை	திருநெல்வேலி தாலுகா
2	நெல்லை நகர்	,,
3	நெல்லை சந்திப்பு	,,
4	பேட்டை	,,
5	வண்ணார்பேட்டை	,,
6	மேலப்பாளையம் I.	,,
7	மேலப்பாளையம் II.	,,
8	தச்சநல்லூர்	,,
9	கங்கைகொண்டான்	,,
10	உக்கிரன்கோட்டை	,,
11	பெண்கள் நூலகம், பெருமாள்புரம், பாளையங்கோட்டை	,,
12	குழந்தைகள் நூலகம் ,,	,,
13	நாரணம்மாள்புரம்	,,
14	சீவலப்பேரி	,,
15	தென்காசி	தென்காசி தாலுகா
16	இலஞ்சி	,,
17	குற்றாலம்	,,
18	பண்பொழி	,,
19	வடகரை	,,
20	இடைகால்	,,
21	கடையநல்லூர்	,,
22	சொக்கம்பட்டி	,,
23	சுரண்டை	,,
24	கீழப்பாவூர்	,,
25	திப்பணம்பட்டி	,,
26	ஆலங்குளம்	,,
27	சுந்தரபாண்டியபுரம்	,,
28	ஊத்துமலை	,,
29	சங்கரன்கோவில்	சங்கரன்கோவில் தாலுகா
30	கரிவலம்வந்தநல்லூர்	,,
31	ராயகிரி	,,
32	விஸ்வநாதப்பேரி	,,
33	சிவகிரி	,,
34	வாசுதேவநல்லூர்	,,
35	புளியங்குடி	,,



நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவின் நூலகங்கள் பணியாற்றும் இடங்கள்.
ஊர்களின் பெயர்களை எண்களின்படி நூலகங்களின் பட்டியலில் காண்க.

36	முள்ளிகுளம்	சங்கரன்கோவில் தாலுகா
37	மடத்துப்பட்டி	,,
38	வீரசிகாமணி	,,
39	சேந்தமரம்	,,
40	குருவிகுளம்	,,
41	நெல்கட்டுஞ்செவல்	,,
42	கோவில்பட்டி	கோவில்பட்டி தாலுகா
43	கழுகுமலே	,,
44	கயத்தார்	,,
45	கடம்பூர்	,,
46	ஓட்டப்பிடாரம்	,,
47	விளாத்திகுளம்	,,
48	எட்டயாபுரம்	,,
49	குளத்தூர்	,,
50	புதூர்	,,
51	தூத்துக்குடி கீளூர்	ஸ்ரீவைகுண்டம் தாலுகா
52	தூத்துக்குடி மேலூர்	,,
53	தூத்துக்குடி வடக்கு	,,
54	தூத்துக்குடி துறைமுகம்	,,
55	குமாரகிரி புதுக்கோட்டை	,,
56	சாயர்புரம்	,,
57	முடிவைத்தானேந்தல்	,,
58	வல்லநாடு	,,
59	செய்துங்கநல்லூர்	,,
60	கருங்குளம்	,,
61	ஸ்ரீவைகுண்டம்	,,
62	பெருங்குளம்	,,
63	ஏரல்	,,
64	ஆழ்வார்திருநகரி	திருச்செந்தூர் தாலுகா
65	தென்திருப்பேரை	,,
66	ஆறுமுகநேரி	,,
67	காயல்பட்டிணம்	,,
68	திருச்செந்தூர்	,,
69	குலசேகரப்பட்டிணம்	,,
70	உடன்குடி	,,
71	மாநாடு தண்டபத்து	,,
72	பரமன்குறிச்சி	,,
73	காயாமொழி	,,
74	நாசரேத்	,,
75	அரசூர் பூச்சிக்காடு	,,
76	முதலூர்	,,

77	நான்குநேரி	நான்குநேரி தாலுகா
78	முனைஞ்சிப்பட்டி	,,
79	மூலைக்கரைப்பட்டி	,,
80	திசையன்விளை	,,
81	இடையன்குடி	,,
82	கரைசுத்துப்புதூர்	,,
83	இட்டமொழி	,,
84	ராதாபுரம்	,,
85	வடக்கன்குளம்	,,
86	பணகுடி	,,
87	வடக்கு வள்ளியூர்	,,
88	ஏர்வாடி	,,
89	திருக்குறுங்குடி	,,
90	புலியூர்குறிச்சி	,,
91	களக்காடு	,,
92	கூடங்குளம்	,,
93	பத்தமடை	அம்பாசமுத்திரம் தாலுகா
94	சேரன்மகாதேவி	,,
95	வீரவநல்லூர்	,,
96	கல்லிடைக்குறிச்சி	,,
97	மணிமுத்தார்	,,
98	அம்பாசமுத்திரம்	,,
99	விக்கிரமசிங்கபுரம்	,,
100	ஆழ்வார்குறிச்சி	,,
101	ரவணசமுத்திரம்	,,
102	கீழக் கடையம்	,,
103	கோயிலூத்து	,,
104	முக்கூடல்	,,

★

நூல் வழங்கும் நிலையங்கள்.

1 நெடுவயல்
2 குத்துக்கல் வலசை
3 சிவந்திபட்டி
4 கொங்கந்தான்பாறை
5 கீழத் திடியூர்
6 மேலப்பாட்டம்

7 வி. புதுக்குடி
8 கூனியூர்
9 காருகுரிச்சி
10 ரெட்டியார்பட்டி
11 தென் பொத்தை
12 ராமநாதபுரம்
13 தென்மலை
14 துரைசாமியாபுரம்
15 இனும் கோவில்பட்டி
16 மேலகரம்
17 விஸ்வநாதபுரம்
18 பேட்டைமாநகர்
19 ஈராச்சி
20 மேலப்புத்தனேரி
21 பாலாமடை
22 பர்கிட்மா நகரம்
23 பார்ஸ்டல் பள்ளி, பாளையங்கோட்டை
24 கரிசூழ்ந்த மங்கலம்
25 நடுவக்குறிச்சி
26 சென்னிகுளம்
27 வல்லம்

தூத்துக்குடி நகரில் நூலக வளர்ச்சி

T. S. அழகியநம்பி,
நூலகர், தூத்துக்குடி கீழூர் நூலகம்.

தூத்துக்குடி நகரம் :–

இது ஒரு துறைமுகப் பட்டினம். உப்பளங்கள், பஞ்சாலை, மீன்பிடித்தல், சங்கு அறுத்தல், முத்துக் குளித்தல் ஆகியவை இப்பட்டினத்தின் சிறப்புத் தொழில்களாகும். இந்தியாவிலேயே முத்துக்குளிக்குமிடம் தூத்துக்குடி ஒன்றே.

தூத்துக்குடி நகராட்சியால் துவக்கப்பட்டு 1954 டிசம்பரில் நெல்லை மாவட்ட நூலக ஆணைக்குழுவால் தூத்துக்குடி கீழூர் நூலகம் ஏற்கப்பட்டு சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் 2576 நூல்களைக் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது. பின்பு இக்கிளை நூலகம் வளர்ச்சி அடைந்து, நூல்களின் எண்ணிக்கையும், பத்திரிகைகளின் எண்ணிக்கையும் அதிகமாக்கப்பட்டது. இன்று 7687 நூல்களும், 78 வார, மாத, நாளிதழ்களுடன் இயங்கி வருகிறது. தொடக்கத்தில் நாள்தோறும் 100 பேர்கள் வரை நூலகத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். இப்போது 300-க்கும் மேல் வந்துகொண்டிருக்கிறார்கள். ஆண்டிற்கு ஏறத்தாழ 62000 பேர்வரை வந்து படித்துச் செல்கின்றனர்.

1954 ஏப்ரலில் இக்கிளையில் ஒரு பெண்கள்—சிறுவர்கள் பகுதி துவங்கப் பட்டது. 37 ஆசிரியைகள் மூலம் நகரிலுள்ள படித்த பெண்களுக்கு, அவர்களது வீடுகளுக்குச் சென்று நூல்கள் வழங்கும் திட்டம் இக்கிளையில் 1963 ஜனவரியில் துவக்கப்பட்டது.

நூலகத்தில் நூல்கள் பொருள்வாரியாக கோலன் முறைப்படி பிரிக்கப்பட்டு அலமாரியில் வரிசைப்படுத்தி அடுக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடியில் ஜனத் தொகை $1\frac{1}{4}$ லட்சத்தை அடைந்துள்ளதாலும், இந்த ஒரு கிளை நூலகம் போதாது என்று கருதி, 1962 ஏப்ரலில் 2-வது கிளை நூலகமாக தூத்துக்குடி–மேலூரிலும், 1965 செப்டம்பரில் 3-வது கிளை நூலகமாக தூத்துக்குடி துறைமுகத்தில் ஒன்றும், 4-வது கிளை நூலகமாக 1966-ல் தூத்துக்குடி வடக்கூரில் ஒன்றும் திறக்கப்பட்டன. தூத்துக்குடி நகரில் 4 கிளை நூலகங்கள் இயங்கி வருகின்றன.


சிறப்பு நிகழ்ச்சிகள்

1. தூத்துக்குடி-I (கீழூர்) நூலகருக்கு 1965 செப்டம்பர் மாதத்தில் 512 உறுப்பினர்களைச் சேர்த்ததற்காக "சிறந்த நூலகர்" என்ற நற்சான்றிதழ் வழங்கப் பட்டது.

2. தமிழக தீ விபத்து நிவாரண நிதிக்கு ரூ. 1027–29 நூலகர் வசூலித்து வழங்கியுள்ளார்.

சில புள்ளி விவரங்கள்.

வ. எண்	கிளை நூலகங்கள்	இருப்பு நூல்கள்	உறுப்பினர்கள்	நூலகத்தைப் பயன்படுத்திய வர்களின் எண்ணிக்கை	படிக்க கொடுக்கப்பட்ட புத்தகங்களின் எண்ணிக்கை
1	தூத்துக்குடி –I கீழூர்	7687	1231	61752	40413
2	தூத்துக்குடி – IIமேலூர்	3037	266	16011	4850
3	தூத்துக்குடி – துறைமுகம்	1035	131	8692	7847
4	தூத்துக்குடி – வடக்கு	556	63	5000	2350



"சேர்வோம் வாரீர்!"

நெல்லை. ஆ. கணபதி.

"நூலகம்" நான்; நல்லபல நூல்கள் கொண்டேன்!
நுண்ணறிவை வளர்க்கின்ற பணியில் உள்ளேன்!
பாலரையும் இளைஞரையும் கிழவர் மற்றும்
பல்வேறு வயதிலுள்ள ஆண்பெண் எல்லாம்
காலைமுதல் மாலைவரை இங்கே வந்து
கதைகவிதை கட்டுரைகள் பலவும் கற்றுச்
சாலவுமே தன்னறிவைப் பெருக்கிக் கொள்ளத்
தகுந்தஇட மாய்அமைந்தேன்! இன்னும் கேட்பீர்! 1

ஒருதொகையை முன்பணமாய்க் கட்டிக் கொண்டால்
உங்களுக்கு வேண்டுகிற நூல்கள் யாவும்
தருவதுடன் பதினைந்து நாட்கள் வீட்டில்
தங்கியதைப் படித்திடவும் மீண்டும் இங்கே
வருகையிலே வேறுபுது நூல்கள் பெற்று
வாழ்வெல்லாம் பயன்பெறவும் வழிகள் உண்டு;
ஒருபிறப்பில் தான்கற்கும் கல்விச் செல்வம்
ஒருவனுக்கு ஏழ்பிறப்பும் பயனே அன்றோ? 2

வள்ளுவரின் இக்கருத்தைத் தெரிந்தே இங்கே
வந்திடவும் வேண்டாமோ? நூல்கள் தம்மை
அள்ளுவதும் வீடுசென்றே அவற்றின் உள்ளே
ஆழ்ந்திடவும் வேண்டாமோ? அட்டை தன்னைக்
கிள்ளுவதும் நூலிலுள்ள படங்கள் மீது
கிறுக்குவதும், நூலகத்தில் சிலரின் செய்கை!
உள்ளுவதோ உயர்வுள்ளல் என்றே வந்து
உயர்ந்தபல நூல்களையே கற்றுச் செல்வீர்! 3

இனிதான சிறுகதைகள்; வெளி நாட்டாரின்
எத்தனையோ மொழிபெயர்ப்பு; கவிதை நூற்கள்;
கனிவான பொன்மொழிகள்; வாரம் மாதம்
காண்கின்ற சஞ்சிகைகள்; நாளிதழ்கள்;
மனிதாபி மானமுடன் வாழ்ந்தோர், மற்றும்
மாவீரர் வரலாறு! இவற்றை யெல்லாம்
தனியாகச் செலவின்றிப் பெற்றுக் கற்கத்
தயங்காமல் நூலகத்தில் சேர்வோம் வாரீர்! 4

ஆற்றலும் வேண்டும்

அன்புவாணன்,
நெல்லை நகர்.

ஒழுக்கம் உயிரினும் ஓம்புதல் வேண்டும்
ஒளியுடன் வாழ்வும் உயர்ந்திட வேண்டும்
அழகாம் கல்வி அணிசெய வேண்டும்
அறமே உலகில் சிறந்திட வேண்டும்
உழவும் தொழிலும் ஓங்கிட வேண்டும்
உயரிய நெறியை உணர்ந்திட வேண்டும்
கள்ளும் சூதும் களைந்திட வேண்டும்
காலமும் இடமும் கருதிட வேண்டும்

உள்ளமும் செயலும் ஒன்றிட வேண்டும்
உறுதியும் உரமும் உண்மையும் வேண்டும்
வெள்ளமாய் எண்ணமும் விரிந்திட வேண்டும்
வலியறிந் தாற்றும் வல்லமை வேண்டும்
கள்ளம் அறியா உள்ளமும் வேண்டும்
கண்ணென நல்வினை காத்திட வேண்டும்
தெள்ளிய செயலில் தெம்புமே வேண்டும்
நற்குணம் பிழையா நாணமும் வேண்டும்

பண்பே எங்கணும் பொங்கிட வேண்டும்
பழமரம் போன்றே பயன்தர வேண்டும்
அன்புடை உணர்வும் அகத்தினில் வேண்டும்
அறம்பொரு ளின்பம் அறிதலும் வேண்டும்
தண்மதி என்றே ஒளிபெற வேண்டும்
தவறில ளுகித் தகைபெற வேண்டும்
குணநலம் சான்ற கொள்கையும் வேண்டும்
கற்றுமே மெய்ப்பொருள் கண்டிட வேண்டும்

இன்முகம் இன்சொல் என்றுமே வேண்டும்
இல்லறம் இனிதே எழில்பெற வேண்டும்
இன்னா செய்யா திருத்தலும் வேண்டும்
இசையுடன் யாண்டும் இன்புற வேண்டும்
இன்பம் பயக்கும் எழில்வினை வேண்டும்
இரப்போர்க் கினிதாய் ஈதலும் வேண்டும்
அன்புடன் ஆன்ற அருள்பெற வேண்டும்
அறிவினால் வெல்லும் ஆற்றலும் வேண்டும்.

நான் கண்ட நூல் நிலையமும் அதனுல் மக்கள் அடையும் பயன்களும்

லெ. சுப்பிரமணியன்

"நூல் பல கல்" ஓம். "வளர்க கலை"

"தொட்டனைத்தூறு மணற்கேணி — மாந்தர்க்குக்
கற்றனைத்தூறும் அறிவு." — குறள்

எனது பள்ளிப் படிப்பின் முதல் வகுப்பில், ஆசிரியர் அவர்கள் கூறிய அறிவுரை இப்பொழுதும் என் காதுகளில் ஒலிக்கின்றன. என்னவென்றால், "ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்று. ஆனுல், எனது பத்தாண்டு நூலகப் பணியில் இன்று நடைமுறையில் என் கண் முன் காண்பதும், மக்களின் கருத்தில் நிலைத்து நிற்பதும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று - அதனினும் நன்று காலையும் மாலையும் நூலகம் செல்வது" என்ற அளவுக்கு நமது நாட்டில் நூலகம் வளர்ந்துள்ளது.

'நூல் நிலையம் இல்லாத ஊரும் ஓர் ஊரா' என்று அறிஞர் லெனின் அவர்களும், 'புத்தகங்கள் இரு வகைப்படும்; ஒரு வகை பொழுது போக்க உதவுகிறவை' மற்ரெரு வகை வாழ்க்கைக்கு உதவுகிறவை' என்று மேதை ரஸ்கின் அவர்களும், புத்தகமே இல்லாத வீடு ஜன்னலே இல்லாத அறைக்கு ஒப்பாகும் என்று அறிஞர் மான் அவர்களும் கூறுகிருர்கள். 'கண்டது கற்கப் பண்டிதனுவான்' "பாடம் ஏறினும் ஏடது கைவிடேல்." 'பாடை ஏறினும் ஏடது கைவிடேல்' என்று பழமொழிகள் நமக்குத் தெரிவிக்கின்றன. இன்று நெல்லை மாவட்டங்களிலுள்ள சிறு கிராமங்களில் கூட நெல்லை மாவட்ட நூலக ஆணைக் குழு, கிளை நூலகங்களையும், நடமாடும் நூலகங்களையும் ஏற்படுத்தி, மக்களுக்கு அறிவுப் பசியைத் தணித்து, நாட்டிலுள்ள ஒவ்வொரு இளைஞர்களையும் அறிவுலக மேதைகளாகவும், ஆற்றலும் திறமையும் மிகுந்த கவிஞர்களாகவும் உருவாக்க, மிக நல்ல பணியைச் செய்து வருகிறது.

திக்கெல்லாம் புகழும், நெல்லுக்கு வேலி கட்டிய திருநெல்வேலிச் சீமையிலே, சான்ருேர்களின் வாக்குப்படி, ஸ்ரீ காந்திமதி அம்பாள் ஆலயத்திற்குத் தென்புறம், நேத்தாஜி போஸ் தினச் சந்தையின் மாடியில் நெல்லை நகர் நூல் நிலையம் அழகாக அமைந்திருப்பது, திருநெல்வேலியின் சிறப்பிற்கு மற்றுமொரு அணிகலனுகும்.

காலையிலும் மாலையிலும் காய்கனி வாங்க வருபவர்களும், கடை வீதிகளுக்குச் செல்பவர்களும், ஆலயத்திற்குச் சென்று வழிபட்டு வருபவர்களும் படிப்பதற்காக வந்து போய் வருவதற்கு ஏற்ப, இந் நகருக்கு நடுவில் நெல்லை நகர் நூல் நிலையம் அமைந்திருப்பது, இத் திருநெல்வேலிச் செல்வர்கள் செய்த தவப் பயன் என்றே கூற வேண்டும்.

பொதுவாக நூல் நிலையங்கள் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல. கருத்தால் கணித்தறிய முடியாத பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நூல் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1. சிறுவர் நூல்நிலையம், 2. பள்ளிக்கூடங்களில் மாணவர் நூல் நிலையம், 3. பொது நூல் நிலையம், 4. ஆராய்ச்சி நூல் நிலையம், 5. நடமாடும் நூல் நிலையம் இவ்வாறு நூல் நிலையங்கள் பலவகையாகும்.

நூலகத்தில், மக்கள் நாள்தோறும் பல செய்தித்தாள்களும், இலக்கியம், இலக்கணம், விஞ்ஞானம், பொறியியல், கட்டுரை, நாவல், சட்டம், வைத்தியம், வான சாஸ்திரம், சரித்திரம் மற்றும் ஏனைய பலதுறைப்பட்ட புத்தகங்களையும் படித்து வருவதுடன், முன் பணமாக ரூபாய் ஐந்தோ அல்லது, ரூபாய் மூன்றோ கட்டி வீடுகளுக்கும் புத்தகங்களை எடுத்துச் சென்று, படித்து மகிழ்ந்து வருகிறார்கள்.

படிப்பதில் ஆர்வம் கொண்ட பெரியவர்களும், இளைஞர்களும் தாங்கள் எவ்வளவுதான் செல்வந்தவராய் இருப்பினும், அவர்களால் எல்லாப் புத்தகங்களும் விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. அப்பேர்ப்பட்ட அரிய புதிய பல நூல்கள் நெல்லை நகர் நூலகத்தில் நிரம்ப இடம் பெற்றுள்ளன. நூலகங்கள் நன்கு வளர்ச்சி அடைய வேண்டுமானால், அது பொதுமக்களாகிய உங்கள் கையில் தான் இருக்கிறது. 'நூலகத்திற்கு வருவது நல்லது. அங்கத்தினராகச் சேர்வது அதைவிட நல்லது.' ஆகையால், நீங்கள் ஒவ்வொருவரும் தங்களுக்கு அருகாமையிலுள்ள நூலகத்தில் உறுப்பினராகச் சேர்வதுடன், தங்களுக்கு வேண்டியவர்களையும் நூலக உறுப்பினராகச் செய்வதும், நூலகத்திற்குத் தினமும் சென்று, படித்து வரும் பழக்கத்தை வழக்கத்திற்குக் கொண்டு வருவதும் நல்லது.

நூல் நிலையங்கள் உலகின் சிறந்த சின்னங்களாகும். ஒரு நூல் நிலையத்தில், வெளி நாடுகளிலும், நம் நாடுகளிலும் பல சில நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர்களும், சில ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அறிஞர்களும், நம்முடனே வாழ்ந்து வரும் அறிஞர்களும் எழுதிய சிறந்த பல நூல்கள், நிலைப் பேழையில் கொலுவீற்றிருக்கின்றன. அவைகளைப் படிக்கும்போது, அவர்களுடன், உரையாடி உறவாடும் உணர்வு ஏற்படுகிறது.

'புத்தகங்களை இரவல் கொடுக்காதீர்கள்! யாரும் அவற்றைத் திருப்பிக் கொடுப்பதில்லை. என் பீரோவில் உள்ள புத்தகங்கள் எல்லாம் இரவல் வாங்கியவையே!' என்று அறிஞர் அனடோல்ஃபிரான்ஸ் அவர்கள், தன்னைத் தாழ்த்துவது போலத் தாழ்த்தி, நம்மில் சிலருக்குப் பாடம் கற்பிக்கிறார்கள். ஆகவே, முன் கூறியது போல, எல்லா புத்தகங்களும் நமக்குக்கிடைப்பதில்லை. அரிய சிறந்த சில புத்தகங்கள் தனிப்பட்டவர்களிடம் இருக்கலாம். அவற்றை நாம் வாங்கிப் படித்தால் உரிய காலத்தில், புத்தகத்தை திரும்ப அவரிடமே சேரும்படிச் செய்வது நல்லது.

'என் நூல் நிலையமே எனக்குப் போதிய பண்ணைப் பெருஞ் செல்வம்' என்று அறிஞர் ஷேக்ஸ்பியர் அவர்கள் கூறியதுபோல், தாங்கள் எல்லோரும் தங்கள் தங்கள் வீடுகளில் ஓர் நூலகம் அமைப்பதுடன், தங்கள் ஊரில் உள்ள பொன்னான பொது நூலகத்துடனும் தொடர்பு கொள்ளும்படியும் கேட்டுக்கொண்டு, சிரம் தாழ்த்திக் கரங்கள் கூப்புகின்றேன்.

மடித்த காகித்தை மறுபடியும் மடித்தால், முதலில் மடிந்த இடத்திலேயே அந்தக் காகிதம் மறுபடியும் மடியும். இதைப்போல, தமிழ்வாணன் நூல்களைப் படித்துப் பழக்கப் பட்டவர்கள் மறுபடியும் தமிழ்வாணன் நூல்களையேதான் திரும்பவும் படிக்கிறார்கள்.

மணிமேகலைப் பிரசுரம்,

4, தணிகாசலம் செட்டி தெரு,

தியாகராய நகர்,

சென்னை - 17.

"Land of Libraries"

By
A. Thirumalaimuthuswamy,
M. A., M. Litt., B. T., D. Lib.,
Department of Library Science,
University of Madras,
Madras-5.

I was invited by the United States Government to visit the United States of America in 1965 on a grant under the educational and cultural programme to participate in a multi-area group librarian programme administered by the International Relation Committee of the American Library Association. During my stay in the United States for about 5 months I visited about 57 libraries and half a dozen library schools and made a good study of them.

I would like to repeat a statement made by me when I was interviewed by Miss. Helen Annee, the reporter of an American daily by name "The Sun", when we visited the free Public library at Baltimore. The statement is "Our country is a land of temples-your country is the land of libraries". Yes, really it is a land of libraries.

There are about 14,000 libraries in the United States exclusive of school libraries. More than half of them are public libraries of one sort or other. The 10% are in city, state or regional systems. These range all the way from the New York Public Library, the country's second largest library, with its eighty branches, to the small city or town library with perhaps a single branch or bookmobile. The 90% which serve small towns and villages are "One – Woman – libraries" like our single teacher schools and they are kept open for a limited number of hours and with a collection far too meagre to meet today's needs. The librarian is usually untrained, and sometimes unpaid. She (always it seems to be a woman), handles budget making, book ordering, classifying and cataloguing, processing and lending; and answers reference questions and helps children to find their books.

The puplic libraries in the States, in my opinion were thrust on the American people and not created by them; that is, thrust to the towns by the millionaires' endowments. Neither the philanthropists nor

the elite ever thought whether the libraries thrust on the people were needed by them. It would be more appropriate and interesting if I tell you something about two merchants who gave a lion's share of their fortunes for the noble cause of the growth of public libraries.

In the late 1870's, Enoch Pratt, a wealthy Baltimore merchant asked a prominent citizen what he considered the greatest present need of the city When the gentleman hesitated in his reply, Pratt himself answered: "I will tell you — a free circulating public library open to all citizens". He also added "My library shall be for all, rich and poor without distinction of race or colour". With this in mind he constructed a building in 1881. He publicly offered it to Baltimore to house the central Library in 1882 with branches in four quarters of the city and an endowmet. Four years after the Pratt library was opened, the steel magnate Andrew Carnegie who started his life as a messenger boy in the telegraph department visited this library as Pratt's guest. Together the two great philanthropists discussed the future of the American public library. Carnegie was impressed with this endowment, and it is not surprising that many years later, when reviewing his own contributions to libraries, he remarked "Pratt was my pioneer". He gave $ 500,000 to the Enoch Pratt Free Library to erect buildings for fourteen branches.

This fabulously wealthy Pittsburgh iron and steel man who was a Scottish American believed that the public Library would be the most effective means of spreading knowledge because it would provide people both with reading for relaxation and inspiration and with the information they needed to fight their way up the ladder of success. His first great gift, one million dollars went to Pittsburgh; the city where he had made his millions. He also donated 60 million dollars to build over 2000 library buildings in the United States and other countries. Here I beg to draw your kind attention to the solid contribution made by Dr. S. R. Ranganathan, the leading library scientist of India. He has contributed a lakh of rupees to the University of Madras to institute a chair for library science by name Sarada Ranganathan Chair. He has also created a trust with the help of the money got through royalty for his books to run two magazines namely *Herald of Library Science and Library Science with a slant to Documentation* and to invite a scholar every year to deliver a series of lectures on library science. Like him the late Kumaraswami Raja who was the Chief Minister of our State and then the Governor of Orissa created a trust to run a big public Library by name Gandhi Kalai Manram in his place, Rajapalayam.

Here is the brief history of public libraries in the United States. The first public libraries in the United States were established during the colonial period. In 1731 Benjamain Franklin started the Library company of Philadelphia. He called it a subscription library. About a hundred years later another kind of library was started by business firms in the large eastern cities. This was the mercantile library. These libraries were supported by business firms for their employees to use. The subscription libraries and mercantile libraries were not free public libraries, because everybody could not use them and they generally charged fees.

The first tax supported library in the United States was in Salisbury, Connecticut. This had been started in 1803 but did not get any money from the town until 1810. The first free public library founded as a tax supported public service was in Peterborough, New Hampshire, in 1833. Among the cities that established tax supported public libraries before 1880 were Boston, Chicago, Cincinnati, Cleveland, Detroit and Los Angeles. The New York Public Library, the second largest public library was established in 1895. The Library of Congress, the world's biggest library was founded in 1800 by the U. S Government for the use of Congress. Since that time, it has been made a public library. The Librarian of this library is appointed by the President of the United States.

As more and more tax supported public libraries were started, librarianship began to be an important profession. In 1876, the American Library Association (A. L. A.) was organised. It has worked tremendously to improve libraries and to bring their service to more and more people. Another boon to the development of public libraries in the United States, as already stated, came about through the generosity of Andrew Carnegie, who helped to start new public libraries in many cities.

In 1930's and 1940's there were Commissioners appointed to enquire and decide whether there were great inequalities of library services in the States. During that period States were able to get money from their legislatures for their library service. In 1948 the A.L.A 's National Plan for public library service was published. There it was suggested that no single standard pattern of service could be recommended for the whole country. So, six different patterns were suggested.

The modern conception of the role of public library service in community life shows a far-reaching change. As a community book store house its business was formerly conducted solely within its walls. Libraries

were like endowed churches or temples. But present day library service carries educational activities into the community in whatever printed or audio-visual form may best serve the needs of the community. In the year 1950, 27 million people had no library service.

Never before 1950, had a Library Service Bill been voted on in the Congress. This bill was lost by 3 votes. But since L. S. Act, June 1956-the Federal Government has been providing part of the cost for extension of service in rural areas having a population of 10,000 or less. In 1958 the first National Library Week was declared open by the President of the United States. Its slogan was "Wake up and Read".

The New Library services and Construction Act which expands a programme that helps to make library services available to 38 million Americans in the rural areas and authorizes efforts to strengthen inadequate urban libraries and for the first time grants for the construction and renovation of library buildings was signed by President Johnson on 11th Februray, 1964. The statement made by President Johnson on the occasion of signing this bill is definitely worth mentioning.

"We are proud and delighted to have this distinguished company with us in the White House. There are few acts of Congress which I sign with more pleasure, and certainly none with more hope than this New Library Services and Construction Act. Good public libraries must be placed within the reach of all our people............ Libraries are for everyone and therein lies their real value. This nation needs a larger and more diversified collection of books. We need better housing for these books. We surely need libraries closer to the people whether through more centrally located libraries or through book mobiles and branch locations. The central fact of our time is this. Books and ideas are the most effective weapons against intolerance and ignorance. A sensitive French man once said that mediocre minds generally condemn anything that passes their understanding. Mediocre minds cannot survive in a modern world, but enlightened minds can survive. The library is the best training ground for enlightenment that rational man has ever conceived ...."

The public libraries in the States have a Board of Trustees to manage them. Normally they are appointed by the Mayor, but the city council must approve of their appointment. The Board of Trustees system has its own advantage for the following reasons:- 1. The Board provides